



16 MAR 2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்றுநோயாளர் காப்பகம்

# திறப்பு விழா - 28.02.06

மருதனார்மடம் உடுவில் சபாபதிப்பிள்ளை வீதியில் இலண்டன் கேன் நிறுவனத்தால் அமைக்கப்பட்ட புற்று நோயாளர் காப்பகம் அன்னை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியால் திறந்து வைக்கப்பட்டது. விழாவுக்கு செஞ்சொற் செல்வர் திரு.ஆறுதிருமுருகன் தலைமை வகித்தார்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்

செஞ்சொற்செல்வர்

திரு. ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்

சைவத்திரு கா. விஜயபாலன் அவர்கள்

2006 பார்த்திப வருடம் மாசி மாதம்

மலர் 43

வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை. பதிவு இல. QD/74/NEWS/2006


## சர்வமதப் பிரார்த்தனை

எம் மண்ணில் அமைதியும் சாந்தியும் சமாதானமும் நிலவ வேண்டும் எனப் பல்வேறு இடங்களில் இம்மாதம் முழுவதும் பிரார்த்தனைகள் நடைபெற்று வருவது நல்வரவேற்புக்குரியது. குறிப்பாக சகலமதத்தவர்களும் சத்திய வழியில் நின்று சமாதானமே எம் குறிக்கோள் என ஓங்கிக் குரல் கொடுப்பது பாராட்டுக்குரியது. ஜெனிவாவில் ஆரம்பித்துள்ள சமாதானப் பேச்சு உண்மையான பலாபலனைத் தரவேண்டும் என யாழ் குடாநாட்டிலும் பல்வேறு பிரார்த்தனைக் கூட்டங்கள் நடாத்தப் பெற்றன. சகல மதத் தலைவர்கள், பெரியவர்கள், குருமார்கள் ஒன்று கூடித் தத்தம் தெய்வங்களை மன்றாடிய காட்சி ஆறுதலைத் தந்தது. தென் இலங்கையிலும் பல இடங்களில் பிரார்த்தனைகள் இடம் பெற்றுள்ளன. உண்மையான ஆன்மிக பக்குவமுடைய சமயத் தலைவர்கள் என்றும் எல்லோரும் பூரண ஒற்றுமையோடு தர்மத்தின் அடிப்படையில் வாழ்வதையே விரும்புவர். இதற்கு மாறானவர்களை ஆத்மிகம் சார்ந்தவர்களாகக் கருதமுடியாது. 'மதத்தின் பெயரால் மனித உரிமைகளை மறுப்பவர்களையும் இறைவா புனிதப்படுத்தி உதவு' என்று வழிபாடு செய்வது தான் நல்லடியார். அகம் திறந்து, அல்லல் போக்க அருமருந்தாக பேச்சுவார்த்தை பயன்தரவேண்டும் பல தடவைகள் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் ஒப்பந்தங்கள் பயனற்றுப் போயின. அதனால் ஏற்பட்ட துன்பம் தொடர்கதையாகி தொலை தூரத்தில் வைத்து, பலதேசத்தவர் கூடி தீர்க்க முனையும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. மனிதன் மனிதத்துவத்தை உணர்ந்து அனைவரும் சுதந்திரத்துடன் வாழ முற்படின் இப் பேச்சுவார்த்தை பெரிய பயனைத்தரும். பலநாட்களாகத் துன்புறும் தமிழினத்தை மனிதாபிமான ரீதியில் காப்பதற்கு அனைவரும் முன்வரவேண்டும் மனித மனங்கள் பண்பட்டுவிட்டால் உறவு வலுத்து விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சைச் சுருக்கிப் பேரின்பத்தை பிரியாச் சிவதுணர் சீவன்
மூச்சை முற்றும் உள்முகமாக்கி மூலக் கனவுற வாழ்ந்தால்
சீச்சீ என்றெ ஆசையாணவச் சிறுமனப் பேயை செற்றால்
ஏச்சில்லாத சம்யோகத்தில் இறப்பையும் வென்றே வாழ்வோம்.

(கவியோகி சுதானந்த பாரதியார்)

என்ற பாடலின் கருத்துக்கமைய சிறுமைகளை நீக்கி பெருமையோடு ஒன்றுபட்டு, நல்வழிகாண ஜெனிவா நிகழ்ச்சி வெற்றியளிக்கப் பிரார்த்திப்போம்.

உணவும், நீரும், காற்றும் நீராடலும் மருந்துண்ணலும் உடல் வாழ்விற்குப் பல வகையான நலன்களை விளைவித்தலைப் போல், அனைவரின் உயிர் வாழ்விற்கும் வழிபாடு மிகப் பெரிதும் இன்றியமையாதது. எனவே எல்லோரும் இன்புற்று வாழ்வதற்கு அவலமின்றி வாழ்வதற்கு இந்நாளில் பிரார்த்தனை செய்வோம்.

வழிபடு தெய்வம் நிறப்புறங்காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழிச் சிறந்து
பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே.



(தொல்காப்பியர்)

எனவே வழிபாட்டின் வாயிலாக பேச்சுவார்த்தை பயன்தர வேண்டும் எனப் பிரார்த்திப்போம். மதத்தலைவர்கள் மனிதாபிமானம் தோற்றுவிடாமல் காப்பதற்கு ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். அரியதோர் சந்தர்ப்பத்தில் அறம்காக் அனைவரும் முயல்வோமாக.

*ஆசிரியர்*


**சிவபூமி கண்தானச் சபை**

தானங்களில் சிறந்த தானமான கண் தானத்தைச் செய்ய முன்வாருங்கள்
உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்று இருக்கும் ஒருவருக்கு ஒளி
கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே
இப்புண்ணிய காரியத்துக்கு
ஒப்புதல் தாருங்கள்.

தொடர்புகளுக்கு:
ஆறு.திருமுருகன்
தொலைபேசி
021-222 6550

கண் வைத்திய நிபுணர்கள்:
Dr. ச. குகதாசன், 021-222 3645
Dr. சிவந்தா, 021-222 3149
யாழ்.போதனா வைத்தியசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித மனத்தைத் தைரியப்படுத்திப் பேசுவோம்

**குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்**

சில வேளைகளில் பின்வரும் விளைவுகளை யோசிக்காமல் நாம் ஏதாவது பேசிவிடுகிறோம். அப்பேச்சு எவ்வளவு தூரம் பிறரைப் பாதித்து விடுகின்றது என்பதை உணர்ந்து கொள்வதில்லை. பலரைப் பொறுத்தமட்டில், உண்மையில், வேண்டுமென்றே அப்படிப் பேசுவதில்லை. அவர்கள் ஒரு பேச்சுக்காகவே அவ்வாறு பேசுகின்றனர். சில சமயங்களில் சம்பிரதாயப் பேச்சாகவும், வேடிக்கைப் பேச்சாகவுங் கூட அது அமைந்து விடுகிறது. எனினும் அத்தகைய பேச்சும் பிறருக்குப் பாரதூரமான பாதிப்புக்களை ஏற்படுத்திவிடுகிறது என்பது உண்மைதான்.

பல நாட்கள் இடைவெளிக்குப் பின்னர் நண்பர் ஒருவரைக் கண்டுவிட்டு, "என்ன, இப்படி இளைத்திருக்கிறாயே, ஏதாவது சுகமில்லாமல் இருந்தாயா? ம், ஆளே உருக்குலைந்து போனியே. முந்தின முறை பார்த்தபொழுது மல்லன் கையில் பொல்லுப் போலை, உருண்டு திரண்டு வாளிப்பாய் இருந்தாய். இப்ப, துரும்பாய் மெலிஞ்சு போனியே என்ன நடந்தது. இந்தக் கோலத்தில் உன்னைப் பார்க்க என் மனசு என்ன வேதனைப்படுகுது தெரியுமா?" என்று ஒருவர் கேட்டார். நண்பர் மீது தனக்கு அக்கறை அதிகம் என்று காட்டிக் கொள்வதற்காக ஒரு சம்பிரதாயமாகத் தான் இவ்வாறு கேட்டுவைத்தார். உண்மையில் நண்பர் மெலிந்திருக்கவில்லை.

அதைக் கேட்ட நண்பர், "எனக்கு அப்படிச் சுகயீனம் ஒன்றுமில்லை. ஏன் நான் நல்லாய்த்தானே இருக்கிறேன். கன நாட்களுக்குப் பிறகு என்னைக் கண்டிருக்கிறாய் அதுதான் உன்னுடைய கண்ணுக்கு என்னைப் பார்த்தால் மெலிஞ்சது போல் தெரியுதாக்கும் என்று சொல்லி ஒருவாறு பூசி மழுப்பிவிட்டு அவ்விடத்தை விட்டுப் போய்விட்டார்.

உண்மையில் நண்பரின் உடலுக்கு ஒன்றுமில்லை என்றும் போல நல்ல ஆரோக்கியத்துடன்தான் இருந்தார். இப்பொழுது நண்பர் நடக்கத் தொடங்கினார். அவரின் மனமும் வேகமாக வேலை செய்யத் தொடங்கியது. ஆளும் எளிதில் உணர்ச்சிக்கு உள்ளாகி விடுபவர்.

"என்னிலும் ஏதோ ஒரு வித்தியாசம் இருக்குப் போலத்தான் தோன்றுது. எனக்குத் தெரியாமல் இருக்கலாம். என் நண்பனுக்குத் தெரிந்துவிட்டது. சும்மா ஏன் நான் மெலிந்து போனேன் என்று அவன் சொல்ல வேணும்" இவ்வாறு நண்பரின் மனம் குழம்பியது.

நண்பர் தொடர்ந்து நடந்தார். இப்பொழுது அவரின் நடையில் ஒரு வித்தியாசம் தெரிந்தது. "முட்டுக்கால் தட்டிறது" என்று சொல்வார்கள் அவ்வாறு அவரின் கால்கள் இரண்டும் முட்டுக்கால் தட்ட, அவரின் நடையில் சோர்வு வெளிப்படையாகத் தெரிந்தது.

வழியில் இன்னொரு நண்பர் வந்தார். இவரின் சோர்ந்த நடையைக் கண்டுவிட்டு, "என்னப்பா நடந்தது ஆள் வாட்டமாய்த் தெரியுது. எப்போதும் போல மிறாய்ப்பாய் இல்லையே" என்றார்.

"ஏன், எப்போதும் போலத்தான் இருக்கிறேன். வாட்டம், சோர்வு என்பது என் வாழ்க்கை அகராதியில் இல்லையே. என்னை எந்த நோயும் அணுகமுடியாது. தெரிஞ்சு கொள்." என்று சொல்லிவிட்டுச் சற்று வீச்சாய் நடந்தார். ஆனால் அவரால் முடியவில்லை. இப்பொழுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் மனம் முன்னரிலும் பார்க்க அதிகம் குழம்பியது. "ம். இவனும் என்னைப் பார்த்து மெலிந்து சோர்ந்து போனேன் என்று சொல்லுகிறாரே" என்று நினைத்து நினைத்து மனம் குழம்பியபடியே வீடு போய்ச் சேர்ந்தார். என்றுமே நோய் என்று சாய்ந்து படுத்து அறியாதவர், அன்று படுத்துவிட்டார்.

மனத்துக்கும் உடல் ஆரோக்கியத்துக்கும் எத்துணை தொடர்பு இருக்கின்றது என்பதை இதிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம். மனத்தின் நிலை மனிதனின் உடல் நலத்தை எப்படியெல்லாம் பாதிக்கிறது என்பதை விஞ்ஞானிகளும், உளவியலாளர்களும் ஆய்வுகள் மூலம் நிரூபித்து உள்ளார்கள். மனத்திற்கு அத்துணை வல்லமை உண்டு. மனத்தினால் ஆக்கவும் முடியும் அழிக்கவும் முடியும்.

ஜாம்பவான் அனுமனைப் பார்த்து "உன்னால் முடியும்.... உன்னால் தான் முடியும்" என்றான். அந்த மன நம்பிக்கைதான் அநுமனைக் கடல்தாண்டி இலங்கைக்கு வர வைத்தது. எனவே நாம் மற்றவர்களைத் தைரியப்படுத்தும் வகையில் பேச வேண்டுமே தவிர, அவர்களின் மனங்களைக் குழப்பித் தைரியத்தைக் கெடுக்கும் வகையில் பேசுதல் ஆகாது என்பதை அறிந்து நடப்போமாக.

## மாசித் திங்கள் மகிமையைப் பாடும்

மாசித் திங்கள் மகிமையைப் பாடும்
கண்ணப்பன் புகழ்பாடும்
மாதொரு பாகன் புகழினைப் பாடும்
மனத்துயர் மறைந்தோடும்
பசித்தால் அன்னம் புசிப்போம் புசிப்போம்
பரமனுக்கும் படைப்போம்
பாரினில் இறைவன் புகழினைப் பாடும்
பக்திநி லைபெறுவோம்.

காளத்தி நாதன் கருணையில் தோய்ந்தார்
திண்ணனெனும் வேடன்
கல்லும் உருகிடக் கரைந்தார் கண்ணில்
குருநிதி லைகண்டார்
உள்ளம் நொந்து நொந்தே நின்றோர்
உருகியே மிகுநொந்தார்
உமையவள் நாதன் கண்களில் பச்சிலைச்
சாற்றினைபிழிந் திட்டார்

ஊனமு திட்டே இறைவனைப் பணிந்தவர்
உள்ளத்தில் ஒளிபெற்றார்
ஊனுக் கூனே மருந்தெனக் கண்டுதன்
கண்களைப் பறித்திட்டார்
ஈனம் உண்டோ? இறைவனுக் கூனமு
திட்டதில் குறையுண்டோ?
இல்லை யில்லை என்றே சிவகோ
சரியார் தொழுநின்றார்

அன்பே தெய்வம் அன்பே ஆண்டவன்
அடியினை நாடும்வழி
இன்பம் வேண்டில் இறையடி தொழுவீர்
இதுவே நல்லவழி
துன்பம் கண்ட போழ்தினில் மட்டும்
துதிப்பதை யேவிட்டும்
என்றும் இறைபுகழ் பாடிம கிழ்வீர்
எழில்மிகு நிலைபெறுவீர்

கவியாக்கம்: **சு. குகதேவன்**
தெல்லிப்பழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னனையாள் பொன் பெற்ற புதுமை

**சிவ:சண்முகவடிவேல் அவர்கள்**

திருப்பூவனம் என்னும் சிறந்த பதி பாண்டிய நாட்டிலுள்ளது. பூவணப்பதியின் பக்கம் எங்கும் நந்தன வனங்கள் எங்கும் வண்ண வண்ணப் பூக்கள் கண்ணைக் கவர்ந்து ஈர்க்கும் தன்மையுடையன. மலர்கள் அள்ளிச் சொரியும் நறுமணம் நாசியை நாடுவன. மணம் மனத்திற்கு மகிழ்வையும் இன்பத்தையும் எழுச்சி பெறச் செய்வன,(அ)

திரிபுராந்தகர் எந்நாளும் தமது துணைவியாரோடும் திருக்கோவிலின் உள்ளும் புறம்புமாக இனிது வீற்றிருந்தருள் பாலிப்பர் வையை ஆறு தனது திரைக் கரங்களால் நந்தன வனங்கள் உதிர்க்கும் மலர்களைப் பூவணப் புனிதர் பொற்றாளில் தூவித் துதிக்கும் அற்புதக் காட்சி கண்களையும் உள்ளக் கருத்தையும் கசிவிக்கும்.

வானிலுள்ள நாண் மீன்களும் நவ கோள்களும் பூவணப் பொற்பதியிலுள்ள சராசரங்கள் அனைத்தும் சிவலிங்க மூர்த்தமாகும் என்று சிந்தனை செய்து செயற்படுவன. அதனால் அப்பதியைக் கடவாமல் விலகிச் செல்வன. இந்திரன் இரவி முதலிய தேவர்கள் பூவணப் புனிதரைப் பூசையாற்றித் தாம் விரும்பிய நற்பேறுகள் எய்தி இன்புறுவர்.

பூவணப் புனித நகர்ச் சோலைக் கிளிகள் தங்கள் விருப்பம் போல வேத கீதங்களை நாதவொலி மிக நவிற்றுவன. பூவணப் புனிதருடைய திருக்கோவிலில் பணிபுரியும் உருத்திர கணிகையர் உரற்றிய தவப்பயன் போல ஒரு நங்கை இருந்தாள்.

அவள், மகரந்தம் சிந்தும் மலர் மாலையுள் வண்டுகள் பண்பாடும் கூந்தலைக் கொண்டவள். தெய்வ அணங்கு போல்வாள் அந்நங்கை. அவள், தேவர்கள் உள்ளத்திற்குக் களிப்பு ஊட்டும் கடலிற் தோன்றிய அமுதம் அணையவள் அவள் பொன்னனையாள் என்னும் பெயரை உடையாள்,

பொன்னனையாள் நரம்பிலமைந்த குரல் முதலிய
ஏழிசைகளை உடைய யாழின் வழியே பாடும் மிடற்றுப்
பாடல் வல்லவள். இன்னும் பரத நூலிற் கூறும் இலக்கணம் நிரம்பிய ஆடலிலும் ஆற்றல் அமைந்தவள். அவற்றால் அரம்பை மகளிரை நிகர்த்தவள், பொன்னனையாள்.

அவள் சிவபுண்ணிய நெறியில் ஒழுகும் மேம்பாட்டால் அரமகளிருக்கும் அப்பாற்பட்டவளானாள்.

பொன்னனையாள் தன்னுடைய தோழியர்கள் கூட்டத்தோடும் பொழுது புலர்வதன் முன் துயில் எழுவாள். புனித நீரில் நீராடுவாள். நியமங்களை நிறைவு செய்த பின்பு தனது உயிருக்கு உயிரான உருத்திர மூர்த்தியை உள்ளுருகி அருச்சிப்பாள்.

பூவணத்துறைப் புனிதரைப் பொன்னனையாள் நாளும் வணங்கிப் போற்றுவாள். நிருத்த நாட்டியம் நிகழ்த்துவாள் இல்லத்தை நாடி வருஞ் சிவனடியார்களை மெய்ப்பொருள் என்று எண்ணும் கருத்தினோடு திருவடியை அர்ச்சிப்பாள். சிவனடியார்கள் மனம் மகிழுமாறு இனிய சுவையோடு கூடிய உணவினை ஊட்டுவாள். எஞ்சி இருக்கும் உணவினையே தான் உண்பாள். அது பொன்னனையாள் தன்னுடைய ஒழுங்கான நியமம்.

பொன்னனையாள் அந்நெறியில் ஒழுகிவரும் அந்நாளில் பூவணத்தில் கோயில் கொண்டருளும் புண்ணியர் அவளுடைய ஆரா அன்பினைப் பூதலத்தோர்க்கு உணர்த்தத் திருவுளங் கொண்டார். மலையான் மடந்தை மணவாளருடைய திருவுருவத்தை உருவாக்க வேண்டும் என்னும் ஓர் ஆசையை அவள் உள்ளத்தில் அரும்ப வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னனையாள் உள்ளத்தில் மழுவாயுதத்தையும் மான் கன்றையும் திருக்கரத்தில் தரித்த சிவபெருமானை பொன்னினால் உருவாக்கி விடவேண்டும் என்னும் ஆசை நாளிலும் பொழுதிலும் வளர்ந்து வளர்ந்து உறுதிபெற்றது.

முதலில் சிவவடிவத்தை மெழுகினால் உருவாக்கினாற் பொன்னனையாளுக்கு நாளும் கையில் கிடைக்கின்ற பொருள் கொஞ்சமேனும் மிஞ்சுவதில்லை. மெய்யடியார்களுடைய பூசைக்கே கையில் சேரும் காசு கணக்காக இருந்தது.

பொருள் வருவாய் அடியார் வழிபாட்டில் செலவானால் இறைவனுடைய திருவுருவம் உருவாவது எங்ஙனம் என்று ஏம்பலித்தாள் பொன்னனையாள். பூவணத்துப் புனிதனார் பொன்னனையாருடைய மனக்குறையை மாற்ற மனங் கொண்டார்.

சுந்தரபாண்டிய மன்னராக மகிழ்வெய்திய சோமசுந்தரப் பெருமான் சித்தமூர்த்தியாகக் கோலம் கொண்டார்.

தூய வெண்ணீறு துதையப் பூசிய திருமேனியரானார். மழுவாயுதத்தைத் திருக்கரத்தில் தரித்தவரானார். யோகபட்டிகை அணியப்பெற்ற இடையை உடையவரானார். கோவணம் மீது கொண்ட ஆடையரானார். பவளம் போன்று சிவந்த சடையுமுடையவரானார். இவ்வாறான சித்தசுவாமித் திருக்கோலத்தோடு பொன்னனையாள் மனையிற் புகுந்தாள்.

சித்த மூர்த்தியார், பொன்னனையாள் இல்லத்திற்கு வந்து உணவு அருந்தும் அளவற்ற அடியார்களோடும் தாமும் ஒருவராக அமர்ந்தாரில்லை. அமுது செய்வதில் ஆர்வங் காட்டினாரும் அல்லர். பொன்னனையாள் மாளிகையின் கடைவாயிலின் ஒரு பக்கமாகத் தனியாக அமர்ந்தருளினார்.

சிவனடியார்கள் எல்லாரும் அமுது செய்தார்கள். பொன்னனையாளிடத்தில் விடை பெற்றுச் சென்றார்கள். தாதியர்கள் தனிமையில் இனிமையோடு இருந்த சித்தமூர்த்தியாருடைய தாளைத் தொழுதார்கள்.

"ஐயனே, திருவமுது செய்வதற்கு உள்ளே எழுந்தருளி வாருங்கள்" என்று வரவேற்று நின்றார்கள் சேடிப்பெண்கள்.

தாதியர்களைப் பார்த்து, "உங்கள் அமுதம் போன்ற தலைவியை இங்கே அழைத்து வாருங்கள்." என்று சித்தசாமி சாற்றினார்.

ஏவல் மகளிர் ஏகினார்கள். பொன்னனையாளை ஏத்திச் சொன்னார்கள்.

"அம்மையே! சிவனடியார்கள் எல்லோரும் திருவமுது செய்து சென்று விட்டார்கள். சித்தர் போன்ற தம்பிரான் ஒருவர் அமுது செய்யாமல் இருக்கின்றார். புன்னகை பூத்துப் பொலிபவராக, இந்நிலவுலகத்தில் கிடைத்தற்கு அரியவராகக் காணப்படுகின்றார்." என்று எடுத்து இயம்பினார்கள் ஏந்திழையார்கள்.

பவளம் போன்ற அதரத்தையும் கொவ்வைக்கனி போன்ற வாயையுமுடைய பொன்னனையாள் தாதியர் கூற்றைச் செவி மடுத்தாள். அடுத்த கணம் நவரத்தினங்களாகிய அணிகலன்கள் மலர்ந்த பூங்கொம்பர் போல நடந்து வந்தாள்.

"சித்த மூர்த்திகள் வரவு நல்லவரவாகுக!" என்று முதலில் வரவேற்று உபசரித்தாள். பின்பு அருக்கியமும் ஆசனமுங் கொடுத்தாள். பேராதரிக்கும் அடியவர்கள் தம் பிறப்பை அறுக்கும் பாதமலர்களை முடியிற் பொருந்த வணங்கினாள்.

பொன்னனையாளுடைய கண்கள் இரண்டும் சித்த மூர்த்திகளுடைய திருமேனியையும் வடிவழகின் செல்வத்தையும் கண்டு களிப்பனவாயின.

"தேவரீர் இங்கு எழுந்தருளுவதற்கு முன்னைப் பிறவிகளில் எத்தகைய மாதவந்தான் செய்தேனோ" என்று சித்த சுவாமியைப் பார்த்துப் பொன்னனையாள் முத்துப் போன்ற ஒள்ளிய புன்னகை மலர வாய் மலர்ந்தாள். கைகள் இரண்டையும் சென்னியிற் சேர்த்துச் சேவித்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறையவர் திருவருள் நாட்டத்தோடு பொன்னனையாளைப் பார்த்தருளினார். பார்த்த பார்வையில் பொன்னனையாள் சித்தருடைய திருவருள் வலையிற் சிக்கிக் கொண்டாள்.

"ஐயரே! உள்ளே எழுந்தருளுங்கள் அடியாளாகிய யான் உய்வடைவதற்கு சித்தர் விரும்பிய தொண்டினைத் திருவுள்ளத்திற்கு இசையுமாறு இயற்றவல்லேன்." என்று பொன்னனையாள் பகர்ந்து மீண்டும் திருவடிகளில் வணங்கினாள்.

அங்கயற்கண்ணியாருடைய நித்த மணாளராகிய நிமலராம் சோமசுந்தரக் கடவுள் உள்ளே நகைத்துக் கொண்டார். மையல் விளைக்கும் பார்வையுடைய பொன்னனையாளைப் பார்த்துப் பகர்ந்தார்.

"மாவடுவின் பிளவினை ஒத்த விழிகளையுடையாய்! பேரழகுடைய நீ உனது கொடி போன்ற இடைபோலச் சிறிது உடல் மெலிந்துள்ளாய்! அதன் காரணத்தை யான் அறிய விரும்புகின்றேன்.' என்றார்.

பொன்னனையாள் கொன்றைமலர் சூடும் பெருமானுடைய திருவடிகளைச் சிரசு பொருந்த வணங்கிப் புகல்வாள்.

"ஐயனே! அடியேனுக்கு வேறொரு மெலிவும் இல்லை. எங்கள் நாயகராகிய சிவபெருமானுடைய திருவுருவத்தை ஆக்குவதற்கு உள்ளத்தில் விள்ளாத விருப்புளது. அவர் வடிவத்தை மெழுகினாற் கருக்கட்டி வைத்துள்ளேன். அதனைப் பொன்னினால் செய்து முடிப்பதற்குப் பொன்னனையாளிடத்தில் பொன் இல்லை. இங்கு நாள்தோறும் என்கையில் சேரும் பொருள் முழுவதும் அடியார் பூசைக்கு அளவாக அமைகின்றது. கொஞ்சமேனும் எஞ்சி மிஞ்சுவதில்லை."

இவ்வாறு அமுதம் போன்ற பொன்னனையாள் அன்போடு தித்திக்கப் பேசும் வார்த்தைகளைச் சித்தமூர்த்தி செவிமடுத்துக் கேட்டார். பின்னர் பொன்னனையாள் கேட்கப் புகன்றருளுகிறார்.

"மயில் இறகின் அடிப்பாகம் போன்ற பற்களையுடைய பாவாய்! கேளாய்.... நீ செல்வம் யாக்கை இளமை என்பன நீர்க்குமிழி போல நிலையற்றவை என்று நன்கு உணரப்பெற்றாய். அறம் சிறந்ததும் நிலையானதும் என்பதையும் தெளியப் பெற்றாய்.

"அறங்களுள்ளே சிவபுண்ணியங்கள் சிறந்தனவாகும். என்றும் சிவபுண்ணியங்களுள்ளும் சிவபூசை சிறந்ததாகும் என்றும் சிவபூசையினும் சிவனடியார் பூசை சிறந்தது என்றும் அறிந்தனையாதலின் சிவனடியார்களைப் பூசிப்பாயாயினை. அதன் பேறாக இம்மை மறுமை இரண்டிலும் பயன் பெற்றனை, பொன்னனையாள் என்னும் உன் பெயருக்குப் பொருத்தமாக அழிவில்லாத இறைவனுடைய திருமேனியைப் பொன்னினால் ஆக்கப் புத்தி வலித்துள்ளாய். நீ வாழி! உன் எண்ணம் என்றும் வாழி.

"நின் மனையிலுள்ள பித்தளையும் ஈயமும் முடிவாயுள்ள பல உலோகங்களாற் செய்யப்பட்ட கலன்களையும் கொண்டு வருவாய்.." என்றுரைத்தார் சித்தசுவாமி.

அது கேட்டுப் பொன்னனையாள் உள்ளம் பூரித்தாள். தனது மாளிகையிலுள்ள, ஈயம், செம்பு, இரும்பு, வெள்ளி, என்பனவும் ஒன்றோடொன்று கலத்தலால் உண்டாகும் பித்தளை வெண்கலம், தராவு முதலிய பலவகை உலோகங்களையும் தேடிச் சேகரித்துக் கொணர்ந்து சித்தர் முன்பு குவித்தாள்.

சித்தமூர்த்தி பொன்னனையாள் தம்முன்னிலையில் வைத்த வெவ்வேறு வகையான உலோகப்பொருள்கள் எல்லாவற்றிலும் சித்தமூர்த்தி திருநீற்றைச் சிதறினார். இவை பொன்னாகக் கடவது என்று கணப்பொழுது சிந்தித்தார். பெண்ணே! நீ இவற்றை இரவில் நெருப்பில் இட்டு எடுப்பாய்... அவை யாவும் நல்ல பொன்னாக மிளிரும். அந்தப் பொன்னைக் கொண்டு இறைவனுடைய திருமேனியை நீ உருவாக்கலாம்..." என்று இயம்பினார் சித்தசுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீர் இங்கு தங்குவீர் இரவில் திருவமுது செய்வீர். இந்த வினையை முடித்துத் தருவீர். இருள் விலகுவதற்கு முன்னர் உமது இல்லத்திற்கு ஏகுவீர்" என்று பொன்னனையாள் சித்தசுவாமியிடத்தில் குறையிரந்து கூறினாள்.

பொன்னனையாள் கூற்றிற்கு அங்கயற்கண்ணம்மையைப் பிரிந்தறியாதவராகிய ஆலவாய் அப்பனார் உடன் பட மறுத்து மொழிந்தார்.

சிறந்த மாடங்கள் உயர்ந்த மதுரையில் வாழும் சித்தர் யாம்." என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினார் மாயம் வல்ல மாதேவர்.

சித்தசுவாமியாகத் தெரிசனம் தந்தவர் வீரக்கழல் ஒலிக்க வெள்ளியம்பலத்தில் ஆடுந்தெய்வம் கூத்தப்பிரான். அவர் பெரும் ஒளிவடிவினராவார் என்ற உண்மையைப் பொன்னனையாள் புரிந்து கொண்டாள்.

சித்தர் மாயமாக மறைந்ததைச் சிந்தித்துப் பொன்னனையாள் பொருமினாள். பின்னர் தனது மனத்தில் மாறாதிருந்த மனக்கவலை தீர வழி வகுத்தாரே என்று மனமகிழ்ச்சி கொண்டாள். பொன்னனையாள் சித்தசுவாமியின் செஞ்சொற்படி உலோகங்கள் அனைத்தையும் அக்கினியில் இட்டாள்.

பொன்னனையாள் நெருப்பில் இட்ட உலோகம் யாவும் பக்குவான்மா, ஆணவ வலிகெட்டுச் சிவபிரானுடைய திருவடி சேரப்பெற்றவர் சிவ ஒளியில் திகழ்வது போல புடமிட்ட பொன்னாகப் பொலிவெய்தியது.

பொன்னனையாள் அந்தப் பொன்னைக் கொண்டு ஒரு வடிவம் இல்லாத இறைவனுக்குத் திருவுருவம் அமைத்தாள்.

பொன்னனையாள் அத்திருமேனியின் அழகினைப் பார்த்து, "சுந்தரநாதன் அல்லனோ இவன்" என்று அள்ளி அணைத்து முத்தமிட்டாள். தன்னுடைய மெய்யன்பில் இடைவிடாதிருந்த இறைவனை நீங்காத அன்பினோடு பிரதிட்டை செய்தாள். அப்பெருமானுடைய திருவிழாவினையும் தேரினையும் நடாத்தி நலம் பெற்றாள். பொன்னனையாள் சிலகாலஞ் செல்லச் சிவகதியில் சேர்ந்தாள்.

பொன்னனையாள் இறைவனுடைய கபோலத்தில் அள்ளுதற்கிட்ட கைநகக் குறியையும் அவள் அழைத்த அழகிய பிரான் என்னுங் காரணப் பெயரையும் கொண்டு பொன்னாலாகிய திருமேனி வேறுபட்டது. கலியுகத்தார்க்குத் தகுதி பொருந்திய திருவுருவமாகத் திகழா நிற்கும்.

நையுறுண் ணிடையி னாளிந்
நாயகன் கபோலத் திட்ட
கையுகிர்க் குறியுஞ் சொன்ன
காரணக் குறியுங் கொண்டு
வெய்யவெங் கதிர்கால் செம்பொன்
மேனிவே றாகி நாலாம்
பொய்யுகத் தவர்க்குத் தக்க
பொருந்துரு வாகி மன்னும். (திருவி-புராணம்.)

(அ) பாண்டிய நாட்டு நந்தவன மலர்மணம் மாண்புடையதன்றோ! தலைச் சங்கத் தலைமைப் புலவரை மலர் மணத்தைக் கருப்பொருளாகக் காட்டி, 'கொங்கு தேர் வாழ்க்கை' என்னும் தொடக்கத்தையுடைய சங்கச் செய்யுளையே செப்பச் செய்த சிறப்பினைப் பெற்ற பெருமையை உடைத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருதாய் இருதாய் பலகோடியதாய் உடனே.....

திருப்பதி இளம்பிறையாளன் அவர்கள்

"கடவுள் ஓரிடத்திலிருந்து கையால் படைப்புத்தொழில் செய்கிறார் என்பது எனக்கு விளங்கவில்லை. கடவுள் தூய அறிவு. அதற்கு இருவித நிலையுண்டு. ஒன்று கடந்த நிலை; மற்றொன்று கலந்தநிலை; முன்னையது பேச்சு எழுத்துக்களையுந் தாண்டித் தனித்து நிற்பது. இங்கே பின்னையதே தேவை இஃது இன்ப அன்பாக யாண்டும் நீக்கமறக் கலந்து நிறைந்துள்ளது. இந்நிலைக்கு இறையென்ற பெயர் வழங்கப்பெற்றது. இறையாண்டும் இறுத்தலையும் இருத்தலையும் உடையது இவ்விறை இயற்கை வாயிலாகத் தன்வினைகளை ஆற்றி வருகிறது. அவ்வினைகளுள் ஒன்று 'படைப்பு'. படைப்பு என்பது இல்லாத ஒன்றையோ அல்லது இல்லாத ஒன்றினின்றும் ஒன்றையோ புதிதாக உண்டுபண்ணுவதன்று. உள்ள ஒன்றே காரியப்படுவது 'படைப்பு' என்று சொல்லப்படுகிறது. அதற்குக் கடவுள் என்னும் அறிவு, நிமித்தமாக நிற்றலான், அது 'கடவுள்' படைப்பு என்று வழங்கப்படுகிறது. இஃது உபசாரம் உண்மையன்று"

**பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை**

பக்கம் 107-108 திருவிக. 1927

உலக சமயங்களிலொன்று சைவமதம். மதம்-கோட்பாடு, கொள்கை எனப் பொருள் தரும். இச்சைவம் சிவசம்பந்தமானது-சிவசம்பந்தமுடையவர்கள் சைவர். (சைவசமயிகள்) இவர்களின் முழுமுதற் கடவுள் சிவனே. அவனே செம்பொருளென அழைக்கப்படுகிறான். எனவே, செம்பொருள் காண்பது அறிவு. அறிவே தெய்வம் என மேற்கண்டோம். சைவம் தரும் சாத்திரம் தோத்திரம் இரண்டும் (மறுபிறப்பை) பிறவியை ஏற்றுக்கொண்டன. பிறவியை அறுக்க எழுந்ததே இம்மனிதம் என்பர். இஃது உயர்ந்த பிறப்புத்தான் தன் நிலையினின்றும் நழுவாதபோது இச்சமய மெய்ம்மை இரு கொள்ளைகளை முற்றுமுழுதாக ஏற்றுக்கொண்டது. ஒன்று பிறவி, மற்றது வினைப்பயன் சமண காப்பியமான சிலம்பும் இதை வழிமொழிகிறது வினையும், வினைப்பயனும், அதனால் மீண்டும் மீண்டும் பிறப்பதும் நம்சமய முடிபு. ஆக வினையை அறுத்து பிறவியினின்றும் விடுபடுவது நம் இறுதி இலக்கு. ஆம் திருக்குறளிலிருந்து திருவருட் பயன்வரை இவ்விரு நிகழ்வும் எடுத்தாளப்பட்டுள்ளன. மணிவாசகரும் பிறவியை வேர் அறுப்பவனேயென்பர். முன்னைவினையின் முடிச்சறுப்பது பற்றிப் பக்திப்பனுவல்களும் சாத்திர தோத்திரங்களும் எடுத்தியம்புகின்றன. வினை-நல்வினை-தீவினை என இரண்டு தீமை நீக்கி, வினையைத் தீய்த்து, நன்மை செய்வதே நமக்குகந்தவழி. இந்த வினை பிறவிதோறும் தேயத் தேய நல்வாழ்வு இயற்றின் பிறவி இல்லாது போம். இறவாமல் பிறவாமல் என்றார் அருணகிரியார். பிறவாமை வேண்டுமென்கிறார் புனிதவதியார். இந்த இருவினையின் மதிமயங்கித்திரியாமல் எனப்பாடினார் வாக்குக்கு அருணகிரியார்.

**இருவினையின் மதிமயங்கித் — திரியாதே**
**எழுநரகில் உழலுநெஞ்சுற் — றலையாதே**
**பரமகுரு அருள் நினைந்திட் — டுணர்வாயே**
**பரவுதரி சனையை யென்றற் — கருள்வாயே**
**தெரிதமிழை யுதவு சங்கம் — புலவோனே**
**சிவனருளுமுருக செம்பொற் — கழலோனே**
**கருணைநெறி புரியு மன்பர்க் — கெளியோனே**
**கனகசபை மருவுகந்தப் — பெருமாளே**

திருப்புகழ்: 619

வினையின் நீங்கியோன் பெறுவது பெரும் பேரின்பம். இந்த வினையும் வினைப்பயனும் உயிரோடு தொடர்புடையது. எம்சமய வாதம் பிறவி வேண்டாம். வேண்டாம், என்பது தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டாத பிறவியை வேண்டியா பெற்றோம். இப்பிறவி போனால் எப்பிறவி வாய்க்குமோ. ஏது வருமோ யாரறியார். எம் இச்சையினாற் பிறந்தோமில்லை. பிறந்துவிட்டோம் வாழ்கின்றோம் எம் அப்புவும் ஆத்தையும் சேர்ந்தனர். நாம் கருவாய் உருவானோம். திருவாசகம் புல் கல்லில் இருந்து பேய்பிசாசு, அசுரர் முனிவர் வரை பிறப்பு உண்டெனப் பதிவு செய்கிறது. இந்தப் பேய் பிசாசுகளை இன்றைய மனிதம் ஏற்கச் சம்மதமில்லை. அதே இலக்கியம் ஒரு தாயின் பிரசவ நிலையை இப்படிப் பாடியுள்ளது சிந்திக்கற்பாற்று.

**......................வார்கடல் உலகினில்**
**யானைமுதலா எறும்பு ஈறாய**
**ஊனமில்யோனியின் உள்வினை பிழைத்தும்**
**மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து**
**ஈனமில்கிருமிச் செருவினில் பிழைத்தும்**
**ஒருமதித் தான்றியின் இருமையில் பிழைத்தும்**
**இருமதி விளைவின் ஒருமையில் பிழைத்தும்**
**மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்**
**ஈரிரு திங்களில் பேரருள் பிழைத்தும்**

**அஞ்சு திங்களில் முஞ்சுதல் பிழைத்தும்**
**ஆறுதிங்களில் ஊறு அவர் பிழைத்தும்**
**ஏழு திங்களில் தாழ்புவி பிழைத்தும்**
**எட்டுத்திங்களில் கட்டமும் பிழைத்தும்**
**ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்**
**தக்க தசமதி தாயொடு தான்படும்**
**துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்**

போற்றித்திரு அகவல் 110-125

தாய்மையின் உயர்வும் தாழ்வும் இப்படி நலிவாய்ப் பேசப்படுகின்றது. இந்தப் பிரசவத்தில் நிகழும் விபரீதங்கள் விபத்துக்கள் எத்தனை. இதை நஞ்சு கொடி மயக்கம் என்றார் யாழ்ப்பாணத்துச் சாமிகள். மனிதத்தாய் தவறு செய்தாளா? இயற்கைத்தாய் தவறினாளா? பிறவி வளருமாயின் பெற்றவளும் பெறுபவளும் வளரத்தான் செய்யும் எத்தனையெத்தனை பிறவிகள். எத்தனையெத்தனை பிறவிகள் அருணகிரியார் அள்ளிச் சொரிகின்றார்.

**எருவாய் கருவாய் தனிலே உருவாய்**
**இதுவே பயிராய் விளைவாகி**
**இவர்போ யவரா யவர்போ யிவரா**
**யிதுவே தொடர்பாய் வெறிபோல**
**ஒருதா யிருதாய் பலகோடியதாய்**
**உடனே அவமாய் அழியாதே**
**ஒருகால் முருகா பரமாகுமரா**
**உயிர்கா வெனவோ தருள்தாராய்**
**முருகா வெனவோர் தரமோ தடியார்**
**முடிமே லிணைதா ளருள்வோனே.**
**முனிவோ ரமரோர் முறையோ வெனவே**
**முதுசூ ரரமேல் விடும்வேலா**
**திருமால் பிரமா வறியா தவர்சீர்**
**சிறுவா திருமால் மருகோனே**
**செழுமா மதில்சே ரழகார் பொழில்சூழ்**
**திருவீ ழியில்வாழ் பெருமாளே**

திருப்புகழ் 857

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவியின் எண்ணற்ற கணக்கை விளக்குவான் பொருட்டு ஒருதாய் என்றார். பின்னர் இருதாய் என்றார் பின்னர் பலகோடியர் தாயென்கின்றார் அருணகிரியார். இதையும் விஞ்சிப் பிறவியை எழுகடல் மணலோடு ஒப்பிட்டும் பாடியுள்ளார்.

**எழுகடல் மணலை அளவிடி னதிகம்**
**எனதிடர் பிறவி அவதாரம்**
**இன்புன தபய மெனதுயி ருடலு**
**மினியுடல் விடுக முடியாது**
**கழுகொடு நரியு மெரி புவிமறலி**
**கமலனு மிகவும் அயர்வானார்**
**கடனுன தபய மடிமையு னடிமை**
**கடுகியு னடிகள் தருவாயே**
**விழுதிக ழழகி மரகத வடிவி**
**விமலிமு னருளு முருகோனே**
**விரிதல மெரிய குலகிரி நெரிய**
**விசைபெறு மயிலில் வருவோனே**
**எழுகடல் குமுற அவுணர்களுயிரை**
**இரைகொளும் அயிலை யுடையோனே**
**இமையவர் முனிவர் பரவிய புலியு**
**ரினில் நட மருவு பெருமாளே**

திருப்புகழ் 596

முதற் திருப்புகழிலே பல கோடி தாயரின் பிரசவ வேதனையைப் பேசிய அருணகிரியார் அடுத்த பாடலில் (INFINITY) கணித்தற்கரிய பிறவியை எழுகடல் மணலையும் வென்றுவிட்டதெனப் பேசுகின்றார். எண்ணிறந்த பிறவிகளின் அதீத நிலைதான் இது. இப்பிறப்பின் படைப்புக் கடவுள் பிரம்மா (கமலன்) உயிரைக்கவர்வோன் காலன் (மறலி–இயமன்) இப்பிணத்தை எரிப்பது நெருப்பு. எரிக்கும் இடம் பூமி. இந்தப் பூமி நெருப்பு இயமன் அயன் (படைப்புத்தெய்வம்) எல்லாருமே அலுத்துப்போயினர். இந்தநிலை இல்லாமற்போக என்னவழி. ஒருமையுடன் முருகன் திருவடிகளையே தியானித்து எம்பிறவியின் வேரை அறுக்க வேண்டும். தோட்டங்களிலும், வயலிலும் முடிச்சுக்கோரை யென்றோர் களைப் பூண்டு உண்டு. அதைக் கொத்தி ஒவ்வொன்றாகக் களைந்து எடுத்து தூரத்திலே போட்டு எரிப்பார். தப்பித்தவறி ஒரு கோரைக் கிழங்கிருந்தாலும் மீண்டும் அது தழைந்து விடும். எம் பிறவியை வேரறுக்க– மனத்தூய்மையும் செயற்தூய்மையும் அகச்சுத்தமும் புறச்சுத்தமும் தேவை. இதனோடு இறைதியானமுந் தேவை. ஆகவே கடனுனது அபயம் அடிமையுள் அடிமை கடுகியுன் அடிகள் தருவாயே என இரக்கிறார் அருணகிரி

இதோ பார்வையிற் பட்டினத்துச் சுவாமிகளும் சில பாடல்கள் யாத்துள்ளார். அவற்றில் மூன்று பாடல்களைச் சிந்தனைக் கெடுப்போம்.

**மண்ணுந் தணலாற வானும் புகையாற**
**எண்ணரிய தாயாரும் இளைப்பாற–பண்ணுமயன்**
**கையாறவும் அடியேன் காலாறவும் காண்பாய்**
**ஐயா திருவை ஆறா.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணித்தபின் இவ்வுடம்பைச் சுடலையிலே எரிக்கிறோம். இப்படிப் பலமுறை எரிப்பதால் பூமி வெப்பம் அடைகிறது. அவ்வெப்பம் ஆறவும் அவ்வேளை மேலெழும் புகை இல்லாமற் போகவும் கருவிலே சுமந்து பெறும் பெற்றதாய்மாரும் ஓய்வு பெறவும் எம்மையெல்லாம் படைக்கின்ற பிரம்மதேவரும் கையாறவும் நடந்து நடந்து அலுத்துப்போன என் கால்கள் இளைப்பாறவும் திருவையாற்றில் இருக்கும் இறைவனே அருள்புரிவாயாகப் பட்டினத்தடிகள் வேண்டுகிறார். ஆகவே என்னைப் பெற்றுப் பெற்று மாதாவும் மனம் சலித்தாள். நானுமோ நடந்து நடந்து கால் அலுத்தேன். சிருஷ்டியின் கருத்தாவான(வேதா) பிரமதேவனும் எழுதியெழுதிக்கை சலித்தும் போனார். ஆகவே இருப்பையூரிற் கோயில் கொண்டெழுந்தருள் பாலிக்கும் இறைவனே எனக்கு அருள்பாலிப்பாயாக எனப் பட்டினத்தடிகள் இரந்து கேட்கிறார்.

**மாதாவும் மனஞ்சலித்தாள் வல்வினையேன் கால்சலித்தேன்**
**வேதாவும் கைசலித்து விட்டானே தாதாகேள்**
**இருப்பையூர் வாழ்சிவனே என்னமோர் அன்னை**
**கருப்பையூர் வாராமற் கார்.**

இப்படிப் பிறவி பற்றிப் பேசிய பட்டினத்தடிகள் இச்சூழ்நிலையில் வாழும் என்னிலைமையென்னவே என்ற ஆதங்கத்தில் ஒட்டுமொத்தமாக இறைவா மீளவும் அன்னை வயிற்றிற் கருவடையாமற் காப்பாற்றுவாயாக.

**நெருப்பான மேனியர் செங்காட்டில் ஆத்தி நிழல் அருகே**
**இருப்பார் திருவுள்ளம் எப்படியோ என்னை யன்னைக்**
**கருப்பாசயத்துக்கே தள்ளு மோகண்ணன் காணரிய**
**திருப்பாதமே தருமோ தெரியாது சிவன் செயலே.**

எத்தனையெத்தனையோ உயிர் இனங்கள் இப்பூமியில் வாழ்கின்றன. மனிதனைத் தவிர மற்றைய உயிரினங்கட்கு இந்தப் பிரச்சினை இல்லை. இந்த மனிதத்துக்குத்தான் இந்தக்கவலை. மறுபிறப்பை ஏற்காத மதத்தவர்கட்கும் இல்லை. இப்புனித பிறவியில் எத்தனை இக்கட்டு எத்தனை பிரச்சினைகள் இதற்கு மனித இனம்முகம் கொடுத்தே தீரவேண்டியுள்ளது. அவரவர் வினையை அவரவரே அனுபவிக்க வேண்டும். எனவே மறுபடியும் கருவடையும் குழியிற்தள்ள எம்மை வருத்தப்படுத்த வேண்டாம். நான் எடுத்த ஜனனமோ கணக்கெழுதித் தொலையாது. என்குறையும் தீர்ந்தபாடில்லையே எனவரும் பாடல் அடிகளை அசைமீட்போம்.

**பெற்றவட்கே தெரியும் அந்த வருத்தம், பிள்ளை**
**பெறாப்பேதை அறிவாளோ? பேறா னந்தம்**
**உற்றவர்க்கே கண்ணீர் கம்பலை உண்டாகும்**
**உறாதவரே கல்நெஞ்சம் உடையார் ஆவர்.**

கம்பலை: நாடகம்

தாயுமானவர்


## உங்கள் அபிமான "அருள் ஒளி" கிடைக்கும் இடங்கள்

அலுவலகம்:
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம்,
கோவில் வீதி,
நல்லூர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் விருந்து

# நேர்மையான வாழ்வு

அருட்சகோதரி ஜதீஸ்வரி அவர்கள்

அன்பான பிள்ளைகளே! அன்பு வாழ்த்து! சிவராத்திரி விரதநாள் வந்தது. பெரியவர்கள் விரதம் அனுட்டிப்பார்கள் சிறு பிள்ளைகளும் விரதம் இருக்கலாம். உண்ணாநோன்பு இருப்பது கடினம். ஆனால்; உண்மையே பேசுவது, பிறர் பொருளுக்கு ஆசைப்படாமல் இருப்பது, பிற உயிர்களுக்கு துன்பம் செய்யாமல் இருப்பது ஆகிய நற்குணங்கள் மிகச்சிறந்த விரதமாகும். இதைச் சிறுவயதிலேயே நாம் கடைப்பிடிக்கலாம்.

நேர்மையாக வாழ்ந்த ஒருவரைப் பற்றி இப்போது ஒரு கதை சொல்கின்றேன். ஒரு அரசன் தனது நாட்டில் சிறந்த ஆட்சியை நடத்தி வந்தான். மக்களுக்கு உடனுக்குடன் சேவையாற்ற நாட்டின் பல பகுதிகளில் காரியஸ்தர்களை நியமித்தான். ஒருமுறை ஒரு மாநிலத்திற்கு ஒரு புதிய அதிகாரி நியமிக்கப்பட்டிருந்தார். அவர் இருந்த பகுதி மக்கள் அவரை மிகவும் போற்றினார்கள். அந்தப் பகுதியில் விவசாயம், வாணிபம், கல்வித்துறை எல்லாம் முன்பை விட மிக நன்றாக வளர்ச்சியடைந்தன. அப்பகுதிக் கணக்கு வழக்குகளும் வரிப்பணமும் உடனுக்குடன் அரசாங்கத்திற்கு வந்து சேர்ந்தன. இவற்றை அவதானித்த அரசன் அந்தப் பகுதியின் புதிய அதிகாரியைப் பற்றி விசாரித்தான். அவர் மிகவும் நேர்மையானவர் கண்டிப்பானவர் என்ற தகவல் கிடைத்தது. அரசன் ஒருநாள் மாறுவேடத்தில் குறிப்பிட்ட அப்பகுதிக்குச் சென்றான். அப்பகுதியின் செழிப்பையும் மக்களின் ஒழுங்கான நடவடிக்கைகளையும் அவதானித்தான். அன்றிரவு வேளையில் அந்த அதிகாரியின் வீட்டிற்குச் சென்றான். வாசலில் அவனை வரவேற்ற அதிகாரியின் மனைவி, "ஐயா! சற்று நேரம் இப்படி இருங்கள். அவர் அரசாங்க கணக்கு வழக்குகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். இப்போது அவரோடு பேச முடியாது. தயவு செய்து இதிலே உட்காருங்கள்" என்று ஒரு ஆசனத்தைக் காட்டினாள். மாறுவேடத்தில் இருந்த அரசனும் அப்படியே உட்கார்ந்திருந்தான். சிறிது தாமதத்தின் பின் அந்த அம்மாள் கூப்பிட்டாள். "ஐயா! தயவு செய்து உள்ளே வாருங்கள். இப்போது அவரோடு பேசலாம்."

அரசனும் உள்ளே சென்றான். அந்த அதிகாரி எழுந்து நின்று மிகப் பணிவுடன் வரவேற்றார். "ஐயா! தாமதத்தைப் பொறுத்துக் கொள்ளுங்கள். இப்படி இருங்கள்," என்று தன் முன்னால் இருந்த ஆசனத்தில் அமரச் செய்தான். "சரி இப்போது சொல்லுங்கள்! என்ன காரியமாக என்னைப் பார்க்க வந்தீர்கள்?" என்று கேட்டான். மாறுவேடத்தில் இருந்த அரசன் "உங்களை ஒருமுறை கண்டு பேசலாம் என்று வந்தேன்" என்றான்.

"எதைப் பற்றிப் பேச வேண்டும்? பொது விஷயமா? தனிப்பட்ட விஷயமா? என்று அந்த அதிகாரி கேட்டான். "நட்பு முறையிலே உங்களைப் பார்த்துப் பேசிப் போகலாம் என்று வந்தேன்" என்றான் அரசன் "அப்படியா?" என்ற அதிகாரி உடனே தன் மேசை மீதிருந்த விளக்கை அணைத்துவிட்டார். "அம்மா! நம்முடைய விளக்கைக் கொண்டு வாருங்கள்!" என்று அவர் சொல்லவும், மனைவி வேறொரு விளக்கை விரைவாகக் கொண்டு வந்து மேசையில் வைத்தார்.

"ஐயா! இப்போது நாம் பேசுவோம். முதலில் உங்களுக்கு நல்வரவு கூறுகிறேன். நீங்கள் பேச விரும்புவதைப் பேசுங்கள்" என்றார் அதிகாரி. திகைத்துப் போயிருந்த அந்த ராஜா கேட்கிறார், "ஐயா! நான் உங்களுடன் பேச வேண்டும் என்று சொன்னவுடன் மேசையில் இருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கை நீங்கள் திடீரென அணைத்த விட்டீர்கள். இங்கே வந்த விளக்கும், அணைக்கப்பட்ட விளக்கும் ஒரே மாதிரித்தான் இருக்கின்றன. ஆனாலும் உங்கள் செய்கை எனக்குப் பயத்தை ஊட்டியுள்ளது. ஏன் அந்த விளக்கை அணைத்து விட்டு இந்த விளக்கைக் கொண்டு வரச் சொன்னீர்கள்? என்று அந்த ராஜா கேட்டார். அதிகாரி, பதில் சொல்கிறார் "புதியவரே நீங்கள் பயப்படுவதற்கு ஒன்றும் இல்லை. விளக்கு இரண்டும் ஒரோ மாதிரியானவை தான் அந்த விளக்கை ஏன் அணைத்தேன் என்றால்.... அந்த விளக்கும் அதிலுள்ள எண்ணெயும் அரசாங்கத்தின் சொத்து. அரச காரியம் கணக்கு வழக்கு பார்ப்பதற்கு மட்டுமே அது உபயோகப்படும். நீங்கள் தனிப்பட்ட நட்புடன் என்னோடு பேச விரும்புவதாகச் சொன்னீர்கள் ஆகவே; எமது சொந்தப் பாவிப்புக்கான இந்த விளக்கைக் கொண்டு வரச் சொன்னேன். இந்த விளக்கும் எண்ணெயும் அரசு எனது உழைப்பிற்காக எனக்குத் தரும் ஊதியத்தில் நாங்கள் வாங்கி வைத்துள்ளது. நமது சொந்தத் தேவைகளுக்காக அரசாங்கச் சொத்தினைப் பயன்படுத்துவது தவறு அல்லவா? நீங்கள் பயப்படாமல் இந்த வீட்டில் தங்கலாம் எனது விருந்தாளி நீங்கள் இப்போது நண்பனாகி விட்டீர்கள் நீங்கள் ஒரு குழப்பமும் அடைய வேண்டியதில்லை. வாருங்கள் இரவு உணவை அருந்திக் கொண்டே பேசுவோம்" என்றார் அந்த அதிகாரி மாறுவேடத்தில் இருந்த அரசனும் அந்த அதிகாரியின் நேர்மையையும், அவர் நிர்வகிக்கும் பகுதியின் உயர்ச்சிக்கு அதுதான் காரணம் என்பதையும் நன்கு புரிந்து கொண்டான்.

□□□ □□□ □□□

# அருள் விருந்து

கொடைகளுள் பெரியது அன்பு என்னும் கொடை. புறவுலகினின்று எதையும் வேண்டாதவனுக்குச் சாந்தியுண்டாகிறது. கடவுளிடம் தன்னை அர்ப்பணம் செய்பவன் கடவுளோடு கலந்துவிடுகிறான்.

அண்டமனைத்துக்கும் விளக்காயிருப்பது எதுவோ அது ஏன் உள்ளத்திலும் ஒளிர்ந்து கொண்டிருப்பதாகுக.

முடிவான நிலையை தக்ஷிணாமூர்த்தியே வாய்விட்டுப் பேசமுடியவில்லை. பின்பு அதை விளக்க முயலுபவர் யார்?

கட்டுப்பாட்டுடன் கூடியிருப்பது மெய்யறிவு. மயக்கத்தால் வரும் பற்றுதலோ நெறி வழுவுதற்கு இடம் தருகிறது.

காட்டு மிருகங்களை மனிதன் கட்டியாளுகிறான். ஆனால் தனது மனதையடக்கியாள அவன் கற்றுக்கொள்ளவில்லை.

நலன் எது என்பதைத் தெரிந்து கொள்ளுகிற மனிதன் அதைச் செய்யாவிட்டால் அவன் கேடு செய்பவன் ஆகிறான்.

ஊற்றினின்று உப்பு நீரும் நன்னீரும் மாறி மாறி வருவதில்லை. மனிதனுடைய நாவினின்று மட்டும் இன்சொல்லும் இன்னாத சொல்லும் மாறி மாறி வருவானேன்?

தன்னைத் தனிவியக்கியாகக் கருதுபவனுக்குத் துன்பமும் சௌபாக்கியமும் உண்டு. தன்னையே பொதுவுடமையாக்கி விடுபவனுக்குத் துன்பமும் சௌர்பாக்கியமும் எங்கே?

மனிதனைக் கடவுள் சரியாக மதிப்புப் போடுகிறார். அவர் மதிப்பினை விட அவன் எள்ளளவும் உயர்ந்தவன் அல்லன். அப்படியிருக்கத் தன்னைப் பற்றி மனிதன் வீண் கர்வம் கொள்வானேன்?

1959; ஆசிரியர்: சுவாமி சித்பவானந்தர்; ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம் (ராமகிருஷ்ணமிஷன்) [தர்மசக்கரம்; சக்கரம்: 8; விளம்பி ஸ்ரீ தை மீ ஆரம்: 1; பக்கம்: 2]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுப் பார்வையில் திருக்கேதீஸ்வர சிவாலயம்

திருமிகு கு. இராசரத்தினம் அவர்கள்
யாழ்ப்பாணம்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

"விருது குன்ற மாமேருவில் நாணர
வா அனலெரி யம்பாய்,
பொருது மூ வெயில் செற்றவன் பற்றிநின
துறைபதி எந்நாளும்
கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ்
பொழிலணி மாதோட்டம்
கருத நின்ற கேதீச்சரங் கைதொழிக்
கடு வினை யடையாவே."

இத்தேவாரம் 2ம் திருமுறையில் இடம் பெற்றுள்ளது.

திருநாவுக்கரசரது தேவாரத்திலும் (6ம் திருமுறை) திருவீழி மழலையில் பாடப்பட்ட

"பூதியணி பொன்னியத்தர் பூண்ணூலர்
பொங்கரவர் சங்கரர் வெண்குழையோர்காதர்
கேதீச்சரமேவினார் கேதாரத்தார்"

இப்பாடலில் கேதீச்சரத்தானின் தோற்றப் பொலிவைப் பாடி திருவீழிமழலைக் கேதாரநாதர் திருக்கேதீச்சரமேவினார் எனப் பாடியுள்ளார்.

7ம் திருமுறையில் சுந்தரர் திருக்கேதீச்சரத்தைப் பாடிய திருக்கேதீச்சரப் பதிகம் இடம்பெற்றுள்ளது. இத்தேவாரப் பாடல்களில் பாலாவியின் கரையில் வீற்றிருக்கும் திருக்கேதீச்சரத்தானது புகழும் அங்கு உள்ள புனித தீர்த்தமாகிய பாலாவியின் பெருமையும், சிறப்பும் வரிக்குவரி எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

"அங்கத்துறு நோய்களடியார்மேல் ஒளித்தருளி"
"பாவம் வினை அறுப்பார் பயில் பாலாவி"

என மூர்த்தி, தீர்த்தச் சிறப்பைப் பாடிய நாயன்மார் தலச்சிறப்பை விதந்து கூறியுள்ளார்.

"வங்கம் மலிகின்ற கடல் மாதோட்டம்"
"வரிய சிறை வண்டு யாழ் செய்யும் மாதோட்டம்"
"வையம் மலிகின்ற கடல் மாதோட்டம்"

எனப் பலவாறாகக் கூறுகின்றார். இவர் பாடலில் இருந்து இன்று மாந்தை என்ற பெயர் கொண்டு விளங்கும் மன்னார், ஒரு காலத்தில் மாதீர்த்தம், பெருந்துறை, என்ற பெயர்களால் அழைக்கப்பட்டு வந்தது. பெரும் வர்த்தகத்துறையாக வங்கம் மலிந்து கப்பல் கட்டும் துறைகளை உள்ளடக்கியதாகக் காணப்பட்டது என்பது புலப்படுகின்றது. இவற்றை விட பௌத்தர்கள் மத்தியிலும் பக்தியுடன் போற்றப்பட்ட புனிதத்தலமாகும் சிங்கள மக்கள் "மஹாவுத" (மகா தீர்த்தம்) என அழைத்தனர். இவர்களது அநுராதபுரக் கல்வெட்டிலல் கூறியபடி

1. "ஜேதவனஸ்தூபிக்கு வழங்கிய தானம் ஒன்றினை மீறியவர்கள்,
மஹாவுத (மாதீர்த்தம்) என்னும் இடத்தில் ஆட்டினைக் கொன்ற பாவத்தை அடைவர்."
என்றும்,

2. கதிர்காமக் கல்வெட்டில்
"குறிப்பிட்ட விதிகளை மீறுவோர் மகாதொடியிலே (மகாதீர்த்தம்) பசுக்களைக் கொன்றோரின் பாவங்களை அடைவர்."

என்றும், எனவே அம்மக்களிடையே மாதீர்த்தம் புனிதத்தலமாகக், கருதப்பட்டதையும், மக்கள் திருக்கேதீச்சரத்தானிடம் கொண்ட பக்தியையும் காட்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி. 10ம் நூற் இறுதியில் சோழர் ஆட்சி நிலை பெற்றபோது திருக்கேதீச்சரம் சோழர்களது ஆதரவைப் பெற்றுத் திருத்தி அமைக்கப்பட்டது எனவும் அதற்கு இராஜ இராசேச்சரம் எனப்பெயர் சூட்டப்பட்டதாக வரலாறு கூறுகின்றது. இம்மன்னன் திருக்கேதீச் சரத்தைச் செப்பனிட அடம்பொன் தானமாகக் கொடுத்ததாகவும் இன்றும் அவனால் தானம் கொடுக்கப்பட்ட இடம் (அடம்பொன்) அடம்பன் என்று பெயர் பெற்று விளங்குகின்றது.

12ம் நூற்றாண்டில் வாழ்ந்து பெரிய புராணத்தை ஆக்கித்தந்த சேக்கிழார் பெருமானின் பாடல்களில்

**"சென்னி மதிபுனைமாட மாதோட்டத்தில்**
**திருக்கேதீச்சரத் தண்ணர் செய்ய பாதம்**
**உன்னி மிகப் பணிந்தேத்தி அன்பரோடும்**
**உலவாத கிழி பெற்றார் உவகையுற்றார்."**

**"மன்னு மிராமேச்சரத்து மாமணியை முன் வணங்கிப்**
**பன்னு தமிழ்த் தொடை சாத்திப் பயில்கின்றார் பாம்பணிந்த**
**சென்னியர் மாதோட்டத்துத் திருக்கேதீச்சரத்தைச் சார்ந்த**
**சொன்மலர் மாலைகள் சாத்தித் தூரத்தே தொழுதமர்ந்தார்."**

என, திருக்கேதீச்சரத்தைத் திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் சேரமான்பெருமாளுடன் சென்ற சுந்தரரும் வணங்கியதைக் குறிப்பிடுகின்றார். எனவே திருமுறைகளில் திருக்கேதீச்சர வரலாறு, தொன்மை, மூர்த்தி, தலம், தீர்த்தம் சிறப்புக்களையெல்லாம் நாம் காண உதவுகின்றது.

பின் கி.பி. 12ம் நூற்றாண்டில் ஏற்பட்ட 2ம் பாண்டியப் பேரரசரது ஆதிக்கத்தின் விளைவாகப் பாண்டிய மன்னர்களின் ஆதரவைப் பெற்றது. இதற்கு ஆதாரமாக 1ம் சுந்தரபாண்டியன் காலத்து "சிதம்பரக் கல்வெட்டொன்றில்" திருக்கேதீச்சரம் பற்றிய செய்தியைக் காண முடிகின்றது.

பாண்டியருக்குப் பிற்பட்ட விஜயநகர மன்னர்கள் காலத்திலும் திருக்கேதீச்சரம் ஆதரவு பெற்றிருக்க வேண்டும் என ஆய்வாளர் கருதுகின்றனர்.

மிகத் தொன்மையுடைய கேதீச்சரம் தன் காலத்தை வரையறை காட்டாத அந்த ஈச்சரமும் காலக் கோள்களுக்கும், அந்நியர்படை எடுப்புக்களுக்கும், உள்நாட்டு யுத்தங்களுக்கும் இடையே அகப்படுவதும் சீரமைப்பதுமாகவே காணப்பட்டு ஒரு நீண்ட செழித்த காலத்தின் பின் கி.பி. 16ம் நூற்றாண்டில் அதற்கும் ஒரு காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டது போல் மன்னார் என்றழைக்கப்படும் பண்டைய மாந்தை போர்த்துக்கேயர் ஆட்சிக்குட்பட்டது.

1540இல் ஏற்பட்ட காலக்கோளால் கேதீச்சரத்தின் அயற்பகுதி மணற்திட்டானது ஆனால் 1589 வரை நித்தியபூசை நடைபெற்றதாக வரலாறு கூறுகின்றது.

1590இல் போர்த்துக்கேயரால் மன்னார் முற்றுமுழுதாக கைப்பற்றப்பட்டதோடு, திருக்கேதீச்சரம் முற்றுமுழுதாகச் சூறையாடப்பட்டது. பொன்னும் பொருளும் மலிந்த திருக்கேதீச்சரம் தரைமட்டமாக்கப்பட்டது. கோயில் பூசகர்கள் விக்கிரகங்களை, கிணறு, குளம் என்று போட்டு விட்டு ஓடினர்.

மன்னார் வாழ் பாரம்பரிய இந்துக்கள் வாள்முனையில் கத்தோலிக்கராக மாற்றப்பட்டனர். உயிருக்கும் உடமைக்கும் பயந்த மக்கள் கிறிஸ்தவர்களாக மாறினர். கேதீச்சரத்தை இடித்த கற்களால் மன்னாரில் கோட்டை ஒன்று கட்டப்பட்டது. புனிதத் தலமாக இருந்த திருக்கேதீச்சரம் பீடிழந்து, பெருமை இழந்து இருள்சூழ்ந்தது. (குவே றோஸ் சுவாமிகள் குறிப்பிட்ட 20 தெய்வச் சிலைகளும் மன்னாரில் உள்ள கேதீச்சரத் திருத்தலத்தைச் சார்ந்தவை என்பது அவரே குறித்துள்ளார்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருண்டு களை இழந்து காணப்பட்ட திருக்கோயிலின் எச்சங்கள் டச்சுக்காரரால் அகற்றப்பட்டது. ஊர்காவற்றுறையில் காணப்படும் ஹமன்கில் கோட்டையில் உள்ள சாசனம் பொறிக்கப்பட்ட தூண் டச்சுக்காரரால் மாதோட்டத்தில் இருந்து கொண்டு செல்லப்பட்டதாக அரசியல் வரலாறு கூறுகின்றது.

எதற்கும் அழிவு உண்டு என்றால் விழவும் உண்டு என்பது போல 1872இல் நாவலர் பெருமான் யாழ்ப்பாணத்து சைவமக்களுக்குத் திருக்கேதீஸ்வர மகிமையை உணர்த்தினார்.

இதன்பின் சைவப் பெரியார்களது இடைவிடாத முயற்சியினால் கோயில் தலம் கண்டு பிடிக்கப்பட்டது. பின்னர் அரசாங்கம் ஏற்படுத்திய இடையூறுகளையெல்லாம் வென்று 40 ஏக்கர் நிலத்தையும் கோயில் சொத்தாக வாங்கி காடுதிருத்தி, இறைவன் குடிகொண்டு இருந்த இடம் தேடி அறிந்து கோயில் அமைத்து 1903ம் ஆண்டு மகாகும்பாபிஷேகம் கண்டு புனரமைக்கப்பட்ட தலம் 15-05-1981ல் பஞ்சரதங்கள் பூட்டி பவனி வந்த காட்சிகளை மறக்கு முன்பே மறுபடியும் கோயில் கிரியைகள் தடைப்பட ஏதுவாக உள்நாட்டுக் குழப்பங்கள் ஏற்பட்டு மக்கள் யாவரும் அந்த எல்லையைவிட்டு நாடோடிகளாயினர். சூழல் நிர்பந்தத்தால் குடியிருப்புக்களற்று சோலைகள் பாலைகளாயின, வீடுகள் மேடுகளாயின. ஆவும் கன்றும் அரவணைப்பற்றுக் காடுகளில் தஞ்சம் புகுந்து காட்டுப் பசுக்கள், காட்டெருதுகள் எனப் பெயரெடுத்து அவை கூட்டம் கூட்டமாகக் காடுகளில் அலைவதை இன்றும் மன்னார் முருங்கன் பாதையில் பிரயாணம் செய்வோர் காணலாம்.

தேவாரம் பாடப்பெற்ற சிவஸ்தலம், பெருந் தொகையான மக்கள் வாழ்ந்து இறைவனை வணங்கவும், குருகுல மாணவர்களின் வேத ஒலி இடையறாது கேட்கவும் பக்தியின் மணம் கமழவும் விளங்கிய திருக்கேதீச்சரம் இன்று தலச்சிறப்புக்குன்றி மனித சுவாசம் காணாதோ என அவலம் கூறும் காட்டு வெளிகளிடையே சோலைகள் சூழ்ந்து காணப்பட்ட கேதீச்சரம் இன்று காடுகளும் காவற்படையும் சூழ்ந்து காணப்படும் புனிதத் தலமாகி விட்டது.

நினைத்த பொழுதில் சென்று வழிபட்ட கேதீச்சரத்தானை வணங்க மக்கள் கடும் சிரமத்துக்குட்பட்டு செல்லவேண்டியுள்ளது. இத்தலமகிமையை மேம்படுத்திய பாலாவி தீர்த்தம் இன்று ஒரு சிறு குளம்போல் பாசியும் சேறும் அடர்ந்து காணப்படுகின்றது. அன்று இப்பாலாவி தீர்த்தமானது ஒரு சிற்றாற்றுடன் தொடர்புபட்டு கேதீச்சரத்தைச் சுற்றி நன்னீர் அகழியாகக் காணப்பட்டது. அதையடுத்து உவர்நீர் அகழி ஒன்று கடல் நீருடன் தொடர்புபட்டுக் காணப்பட்டதாகவும், இங்கே கோயிலிற்கு உரிய பெக்கீசம் கோயில் வளவில் பாதுகாக்கப்பட்ட தாகவும் அங்கே அந்தணர்களும் வாழ்ந்திருக்கவேண்டும் என்றும், அகழிக்கு சிறிது தொலைவில் மாளிகைத்திடல் என்ற குடியிருப்புக் காணப்பட்டதாகவும் அங்கே பெருங்குடி மக்களும் அதை அடுத்து காணப்பட்ட "பாப்பாமோட்டை (பார்ப்பனர் மோடை) என்ற அந்தணர் குடியிருப்பும் சற்றே புறத்தே கன்னாதிட்டி என்ற கன்னார் குடியிருப்பும் காணப்பட்டது. இது இன்று கன்னாட்டி எனப்படுகிறது.

செல்வம் மலிகின்ற கடல் மாதோட்டத்தின் செல்வனாக விளங்கியவர் கேதீச்சரத் தான். இவருடைய செல்வங்கள் அனைத்தையும் கோயிலில் வைக்கமுடியாத இடத்தில் தான் கோயில் குடியிருப்பு அமைக்கப்பட்டதாகவும் (மாளிகைத்திடல்)

கோயிலிற் சேவை செய்த அந்தணர் வாழ்ந்த இடமே பாப்பனர்மோடை (பாப்பாமோட்டை இன்று) எனவும், பண்டு கருங்கற் கட்டிடமாக இருந்திருக்கவேண்டும் எனவே கட்டவேலை சம்பந்தமான தொழிலாளர் வாழ்ந்த இடம் கன்னாதிட்டி எனவும் பெயர்பெற்று விளங்குகின்றது. என வரலாற்று ஆய்வாளர் கருதுவர்.

தலம், மூர்த்தி, தீர்த்தம் எனப் பெருமை பெற்று விளங்கிய கேதீச்சரத்தைக் காணக் கண்கோடி வேண்டும். அந்தக் காலம் வரும் காத்திருப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவன் அருட்கதைகள்

மாதாஜி அவர்கள்

## நான்காவது தடாதகைப்பிராட்டியாரின் கதை

மலையத்துவசன், வடமொழி தென்மொழி இரண்டும் நன்றாகக் கற்றவன். மனுநீதி வழுவாது குடிமக்களிடம் குறைகள் நேராது செங்கோலோச்சி வந்தான். திரிகாலமும் தவறாது சிவனை வழிபட்டு வந்தான். சூரிய குலத்து சூரசேனன் என்னும் அரசனுடைய மகளாகிய காஞ்சனமாலையை விவாகம் செய்தான்.

பல வருடங்கள் சென்றன. மலையத்துவசனுக்குப் புத்திரப்பேறு கிடையாமையால் மிகவும் கவலையடைந்தான். பல சிவ விரதமனுட்டித்து அசுவமேத யாகமும் செய்தான். பின்னர் தேவேந்திரனின் ஆலோசனைப்படி புத்திரகாமேட்டி யாகம் செய்தான். அவ்வாறு வேதாகம விதிப்படி செய்த யாகத்திலிருந்து, மூவேந்தருள் பாண்டியனே சிறப்புடையவன் என்னும்படி உலக மாதாவாகிய உமாதேவி மூன்று வயதுடைய அழகிய பெண்ணாக யாக குண்டத்தில் நின்றும் புறப்பட்டு காஞ்சனமாலையின் மடியிலிருந்தாள். உடனே காஞ்சனமாலை அப்பெண் குழந்தையை எடுத்து தன் மார்புடன் அணைத்து முத்தமிட்டாள்.

பரஞான வடிவமாகிய மீனாட்சிஅம்மை தன் அன்பின் மிகுதியாலும், தவத்தின் மிகுதியாலும், யாகத்தினின்றும் வெளிவந்ததையுணராத மலையத்துவசன், "நான் எனக்கொரு புத்திரன் வேண்டுமென நீண்டகாலம் தவம் செய்தேன். புத்திரகாமேட்டி யாகமும் செய்தேன். இந்த யாகம், எனக்கு மூன்று முலைகளையுடைய பெண்குழந்தையைத் தந்துவிட்டது. ஐயையோ! என் செய்வேன். எனது பகைவர்கள் எள்ளி நகையாடி ஏளனம் செய்யப் போகிறார்களே என்று கவலைப்பட்டான். அப்பொழுது, "அரசனே! உன் மகளுக்குப் புத்திரனைப் போல வேதவிதிப்படி சடங்குகள் செய்து தடாதகையெனப் பெயரிட்டு முடிசூட்டக் கடவாய். இப்பெண்ணுக்குக் கணவன் வரும்போது ஒருதனம் மறையும்" என ஆகாயத்திலிருந்து அசரீரி வாக்குத் தோன்றியது. இதனால் பாண்டியன் அன்பும் மகிழ்ச்சியும் கொண்டு யாகத்தைச் செய்து முடித்தான்.

இதன்பின் தடாதகையாகிய தெய்வீகக் குழந்தை கிடைத்ததன் பயனால் பிராமணர் முதலியோர்க்குச் சுவர்ணதானம் செய்வித்தான். சிறையில் இருந்தோரை விடுதலை செய்து, சிறைச்சாலைகளை இடித்துத் தள்ளினான். சோமசுந்தரக் கடவுளுக்கு விசேட விழாக்கள் செய்தான். குடிமக்களிடமும் சிற்றரசர்களிடமும் திறை வாங்காது நீக்கினான். ஆலயங்களில் அறச்சாலைகள் சீராக நடத்தக் கட்டளையிட்டான். விரும்பினோர் விரும்பிய பொருட்களை எடுத்துச் செல்லப் பண்டகசாலைகளைத் திறந்து விட்டான்.

சிவபெருமான் அருளிச்செய்த படி நல்ல நாளில் தடாதகைப் பிராட்டியாருக்குரிய சடங்குகளை அரசன் செய்வித்து முடித்தான். ஓர் அரசனுக்குரிய யானையேற்றம், குதிரையேற்றம் முதலாகப் போர்ப்பயிற்சியுடன் படைத்தொழில் முதலாக அறுபத்துநான்கு கலைகளும் பயிற்றப்பட்டமையால், பிராட்டி தனது பதினாறு வயதில் சகல கலைகளையும் கற்றுவிட்டாள். பாண்டியன் பிராட்டிக்கு முடிசூட்டத் தீர்மானித்தான். அவனுடைய ஆணைப்படி மந்திரியாகிய சுமதி தடாதகையின் முடிசூட்டு விழாச் செய்தியை எல்லாத் தேசங்கட்கும் அறிவிக்க ஓலை அனுப்பினான். முடிசூட்டு விழாவிற்காக நாடு முழுவதும் விழாக்கோலம் கொள்ளும்படி அலங்கரித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானைமேல் கங்கைத் தீர்த்தம் முதலியவற்றை மலையத்துவசன் வருவித்தான். பின்னர் அவற்றுடன் சுவதீர்த்தம் பூரித்த சுவர்ண கும்பத்தைப் பூசித்து, அக்கினி காரியம் செய்து சிங்காசனத்தைப் பூசனை பண்ணினான். பின்னர் திருமுடியை யானைமேல் வைத்துப் பூசித்தான். தடாதகைப் பிராட்டியை சிங்காசனத்தில் இருத்தினான். பொன், இரத்தினம், முத்து முதலிய நவரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்ட ஆபரணங்களால் பிராட்டியை அலங்கரித்தான். பல வாத்தியங்கள் இயம்பவும் முழங்கவும் பூமாரி தேவர்கள் பொழியவும். வேதங்கள் முழங்கவும் மகளுக்கு முடிசூட்டித் தன்னரசை அளித்தான். யானையில் வலம் வந்து பெருஞ்செல்வமெனத் தனது விரதம் முடித்தனள்.

இன்று நாம் பெண்ணுலகை நோக்கும் போது, அவலங்களும், அவமானங்களும் விஞ்சி நிற்பதைக் காதாரக் கேட்டு கண்ணாரக்கண்டு பெண்களாகிய நாம் நதிபோல் கண்ணீர் வடித்து, என்றும் மரண பயத்துடனும், எப்போது எமது மானம் எந்தத் தெருவில் எந்த நேரத்தில் மானத்துடன் உயிரும் போய்விடுமோ? அத்துடன் உறவினர் உயிரும் போகுமோ என்று அஞ்சி அஞ்சி சாகுகின்ற பெண்களுக்கு, தடாதகைப் பிராட்டியின் அன்றாட வாழ்க்கை முறைகள் கலங்கரை விளக்கமாக வழிகாட்டுகின்றது. தடாதகை பிராட்டி அரசியாக நடந்து கொண்ட நடத்துகின்ற வாழ்க்கைச் சித்திரம் எல்லாம் பெண்களுக்கும் பொருந்துகின்றது.

அரசியான தடாதகைப் பிராட்டி அரசியாவதற்கு முன்பும் அரசுப்பட்டம் சூட்டி முடி தரித்த பின்பும் வேத சிவாகமங்களில் விதிக்கப்பட்ட விதிகளின் படி அதிகாலை பிரம்ம முகூர்த்த நேரத்தில் இனிய வாத்தியங்கள் செவிகளில் பட நித்திரை விட்டெழுந்து நித்திய கரும விதிகளை முடித்து நீராடி சிவபூசை முதலியன முடிப்பாள். பின்னர் அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்றாங்கு பெற்றோரை வணங்குவாள். பின்னர் பூலோக சிவலோகம் எனப்படும் மதுரையம்பதியிலுள்ள மீனாட்சியம்மையை வணங்குதல் முதலான நற்காரியங்கள் யாவும் கூறப்படுகின்ற முப்பத்திரண்டறங்களும் செய்வாள். ஒவ்வொரு மாதத்திற்கும் ஒவ்வொரு உணவு வகையுண்டு. அவ்வாறு அந்தந்த மாத உணவுகளை உண்டு, விரதமிருந்து இறைவனைத் தியானம் செய்து யாழினைக் கையிலேந்திப் பாடுவானாள்.

**ஒளியாலுலகின் உயிரனைத்து மீன்போற் செவ்வியுற நோக்கி**
**அளியால் வளர்க்கு மங்கயற்கண்ணே கன்னியன்னமே**
**அளியா விமவான் திருமகளா யாவின்ன மயில்பூவை**
**தெளியா மழலைக் கிளிவளர்த்து விளையாட்ட யருசெயலென்னை**

**அண்டக் குவைவெண் மணற்சிறு சோறாக்கித் தனியே விளையாடும்**
**கொண்டற் கோதாய் படியெழுதலாகா வுருவக் கோகிலமே**
**கொண்டற் குடுமி யிமையவரை யருவி கொழிக்கும் குளிர்முகத்தாள்**
**வண்டற் குதலை மகளிரோடும் விளையாட்டயரும் வனப்பெண்ணே**

இப்படியே வித்தியாவதி பாடித் துதிசெய்ய அன்பு வலைப்படும் மீனாட்சியம்மை மூன்று வயதுடைய சிறு பெண்ணாக வடிவம் கொண்டு ஆலயத்தில் வந்து நின்றாள். வித்தியாவதி அவளை வணங்கி நின்றாள் உலகமாதாவாகிய மீனாட்சி அவள்மீது திருக்கடைக்கண் சாத்தி யாது விரும்பினை என்றருளினார். அப்போது வித்தியாவதி அஞ்சலி செய்து எப்போதும் உன்னுடைய திருவடிவத்தாமரையில் மீளா அன்பு வைத்திருக்க வேண்டுமென்றார். மீண்டும் ஒருவாரம் கேளென மீனாட்சியம்மை அருளியபோது அதற்கு வித்தியாவதி இந்தக் குழந்தைபோல் நீ எனக்கு மகளாக வரவேண்டும் என்றபோது, மீனாட்சியம்மை அதற்கிசைந்து மலையத்துவசன் என்ற பாண்டியன் பிறப்பான். நீ அவனைத் திருமணம் செய்வாய். நான் உனக்குப் புத்திரியாக வருவேன் என்று திருவாய் மலர்ந்து மறைந்தார். அதன் பயனாக மீனாட்சியம்மை பாண்டியன் மகளாய் தடாதகைப் பிராட்டி நாமத்துடன் அவதாரம் செய்தாள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது கடமை

திரு. க. சிவசங்கரநாதன் அவர்கள்
சரசாலை

இவ்வுலக வாழ்வில் யாவரும் தம் உரிமையை நிலைநாட்டவே விரும்புகின்றனர். கடமையைப் பற்றி நினைக்கவும் சிந்திக்கவும் மறந்து விடுகின்றனர். கடமையை எவனேனும் எடுத்துக்காட்டுவானேயானால் அவன் யாருக்கும் விரோதி ஆகும் நிலைமையை அடைகிறான். நீதிமுறைப்படி எதை அவன் கொடுக்கவேண்டுமோ அது அதனது கடமையைச் செய்தால் தான் உரிமையைப் பெற முடியும் முற்றிய கடமைகளே உரிமையைத் தருகின்றன. ஆகவே யாம் காத்துக்கொள்ளவேண்டும்.

அப்படியானால் நம் கடமை யாது? யாம் தற்போது மானிடராக வாழ்கின்றோம் இப்பிறவி நமக்குக் கிடைக்க நாம் எத்தகைய புண்ணியம் செய்துள்ளோமோ? அதிலும் உறுப்புகளில் எவ்வித குறைவும் இன்றித் தோன்றியதை நினைத்தால் நமக்கே பெருமிதம் உண்டாகிறதல்லவா? இனிவரும் பிறவிகளிலும் நாம் மனிதராகவே பிறப்போம் என்ற நியதி உண்டா எனின் அதுவும் இல்லை. இதனையே அரிது அரிது மானிடராதல் அரிது என ஒளவையார் கூறுகிறார். எண்ணரிய பிறவி தனின் மானிடப் பிறவிதான் யாதினும் அரிதரிது காண் இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ ஏதுவருமோ அறிகிலேன் என்று கரைகிறார் தாயுமான அடிகள். புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப் பல்விருகமாகிப் பறவையாய் பாம்பாகி எல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தேன் என்று உருகுகிறார் மணிவாசகப்பெருமான். இவ்வளவு சிறந்த இப்பிறவியின் பயனை நாம் அடைகிறோமா? பத்துமாதம் தவம்செய்து பெற்ற இவ்வுடலை நட்டைப் பானையைக் கூத்தாடிக் கூத்தாடிப் போட்டு உடைத்து விடுகிறோமே என்ன கொடுமை. நாம் மிக்க அழகானதென்று கருதும் இவ்வுடல் காற்றடைந்த பை அல்லவா? எலும்பும் நிணமும் நரம்பும் சேர்ந்து இழுத்துக்கட்டிய கூடுஅல்லவா? இறைவன் ஒருவனைத் தவிர வேறு யாராலும் படைக்க முடியாத இவ்வீட்டில் இறைவன் தானே குடியிருக்கிறான் அன்றோ? இதனை நாம் உணராது நான் நீ என்று அகந்தை கொள்வதும் அங்ஙனமே உள்ளபிற உயிருக்கு ஊறு நினைப்பதும் செய்வதும் கூடாதே இதனைக் கருத்தில் கொண்டே பகைவனுக்கருள்வாய் நன்னெஞ்சே பகைவருக்கருள்வாய் பகை நடுவினில் அன்புருவான நம்பரமன் வாழ்கின்றான் என்றார் பாரதி.

இவ்வாக்கையின் நிலையை நாம் அறியாதவர்கள் தான். எண்ணற்ற உயிர்கள் பிறக்கின்றன அழிகின்றன நேற்று உள்ளவன் இன்றில்லை. என்று கூறப்படுவதே இவ்வுலகின் இறப்பாக பொதுமறை கூறுகிறது. இன்றைக்கிருப்பாரை நாளைக்கிருப்பாரென்று எண்ணவோதிடமில்லை. தூங்குகையில் வாங்குகின்ற மூச்சு அது துயில் மாறிப் போனாலும் போச்சு "உறங்குவது போலும் சாக்காடு" பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும் உறங்கலும் விழித்தலும் போன்றது. என்ற தொடர்கள் இவ்வுடலின் நிலையினை நன்கு கூறும். மேலும் இவ்வுடலோ பல நோய்களுக்கிருப்பிடம் உடன் பிறந்தே கொல்லும் வியாதிகளைக் கொண்டது இத்தகைய இழிநிலையை உடைய இவ்வுடலை எடுத்த நாம் நாச்செற்றுவிக்குள்மேல் வரமுன் செய்ய வேண்யடிவை யாவை?

**குடிப்பிறப் பழிக்கும் விழுப்பம் கொல்லும்**
**பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்**
**பூண் அணி மாதரோடு புறங்கடை நிறுத்தும்**
**பசிப்பிணி என்னும் பாவி?** – மணிமேகலை

முன்பு பூண் அணிந்திருந்த மனைவியோடு இப்பொழுது செல்வர் வீட்டு வாசலிலே நிறுத்திவிடும் பசி அப்பப்பா மிகக்கொடுமை இதை நினைத்தே வள்ளுவர் பிச்சை எடுத்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவன் வாழ வேண்டுமெனப் பிரமன் விதித்திருந்தால் அவனே பிச்சை எடுக்கும் தொழிலைச் செய்து பார்க்கட்டும் என்று கூறுவது போல்

**இரந்து உயிர்வாழ்தல் வேண்டின்பரந்து**
**கெடுக உலகியற்றி யான்** என்று கூறுகிறார்.

இங்குதான் நமது முதற்கடமை தோன்றுகிறது. ஐயம் இட்டு உண். மருந்தே ஆயினும் விருந்தோடு உண் (மருந்து அருமருந்து–அமிர்தம்) இதுதான் முதற்கடமை. ஒவ்வொருவரும் தாம் உணவுண்ணும் நேரத்தில் வருபவர்களுக்கு சிறிதளவேனும் கொடுத்து உண்ணவேண்டும். திருமூலரும் யாவர்க்கும் ஆம் உண்ணும்போது ஒருகைப்பிடி என்று கூறுகிறார் பொருட்செல்வம் தேடிய ஒருவன் அதனைப் பத்திரமா வைக்க விரும்பினால் பொருளற்ற வறியவரது பசியைப் போக்க அச்செல்வத்தைப் பயன்படுத்தவேண்டும். ஏனெனில் செல்வம் என்ற பெயரே நான் உன்னிடமிருந்து சென்று விடுவேன் என்று கூறுவதுபோல இருக்கிறது. மணிமேகலைக் காப்பியத்தின் முக்கிய நோக்கங்களில் மிக முக்கியமானது பசிப்பிணியை போக்கலே. அதனால் தான் "மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்"கெல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்று சாத்தனார் கூறுகிறார். இத்தகைய அறவழியில் இல்வாழ்க்கையை நடாத்துவோமானால் துறவற வழியில் பஞ்சாக்கினி மத்தியில் நின்று துன்பப்பட்டுக்கரைசேர வேண்டியதில்லை.

மற்றும் முக்கிய கடமை நமக்கு உண்டு அதுவே நம்மைப் படைத்த கடவுளுக்கு நன்றி பாராட்டல் எவரிடமேனும் ஏதேனும் பொருளை யாம் பெற்றால் நான் அவருக்கு நன்றி பாராட்டும் கடமை உள்ளவர் ஆகிறோம் நமக்குப் பலவகையிலும் உதவும் கடவுளைப் பற்றி நாம் சிந்திக்கிறோமா? தற்கால இயந்திர உலகில் கடவுளை நினைக்கவும் நமக்கு நேரம் ஏது? புறநானூற்றுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடிய பெருந்தேவனார் இறைவனது தட்சிணாமூர்த்தக் கோலத்தை வருணித்துள்ளார்.

**"நீர் அறவு அறியாக்கரத்துத்**
**தாழ்சடைப் பொலிந்த அருந்தவர் தோற்கே"**

என்பது அப்பாடலின் ஒருபகுதி. இறைவன் தவம் செய்கிறானாம் ஏனோ? நாமெல்லாம் இறைவனை அடையத் தவம் செய்கிறோம் இறைவன் ஏன் தவம் செய்யவேண்டும்? நாம் பிறர் எதையேனும் செய்யவேண்டுமென்று எதிர்பார்த்தால் அதை நாமே செய்கையில் காட்டவேண்டும் அப்பொழுது தான் அதனைப் பிறரும் பின்பற்றுவர் வெறும் வாய்ச்சொல் பயன்தராது.

அழகான நாடகமேடை பாடசாலை விழா ஆரம்பமாகப் போகிறது பெரியவர்களுக்காக நாற்காலிகள் போடப்பட்டுள்ளன. மாணவர்களுக்குப் பாய் விரிக்கப்பட்டிருந்தது. மாணவர்கள் நாற்காலியில் உட்கார்ந்திருந்தனர். பாடசாலை அதிபர் கண்டார். திகைத்தார் வேகமாகச் சென்றார் மேடையைப் பார்த்து பாயில் உட்கார்ந்தார். மாணவர்கள் கண்டனர் வரிசையாகத் தலைமை ஆசிரியர் (பாடசாலை அதிபர்) பின்பாயில் உட்கார்ந்து விட்டனர். இப்பொழுது பெரியவர்கள் நாற்காலியில் உட்கார முடிந்தது. ஆகவே பிறர் எதைச் செய்யவேண்டுமென நாம் எதிர்பார்க்கிறோமோ அதை நாமே செய்யவேண்டும்.

இம்முறையில் நாம் தவம் செய்து வீடுபெற வேண்டும். எனக்குறிப்பாக உணர்த்துவது போல் இறைவனும் தவம் செய்கிறான் ஆகவே அவன் காட்டிய வழியே வாழ்ந்து அவன் அடிகளைப் பற்றுவோம்

**பெறுதற்கரிய பிறவியைப் பெற்றும்**
**பெறுதற்கரிய பிரானடி பேணார்**
**பெறுதற்கரிய பிராணிகளெல்லாம்**
**பெறுதற்கரிய தோர் பேறிழந்தாரே** – திருமந்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபூதியின் மகிமை

கவிமணி இராசையா ஸ்ரீதரன் அவர்கள்

சைவசமய சின்னங்களான விபூதியும் உருத்திராக்கமும் மிக மகிமை மிக்க பொருள்களாகும். வி என்றால் மேலான, பூதி என்றால் செல்வம் என்று பொருள். ஆகவே விபூதி ஒர் உயர்ந்த இடத்தில் வைத்துப் பூஜிக்கப்பட வேண்டிய பொருள்.

"நீறு இல்லா நெற்றி பாழ்" என்பது முதுமொழி. நெற்றியில் எப்போதும் திருநீறு துலங்கவேண்டும். திருநீறு தரித்த நெற்றியிலே ஒரு தேஜஸ் விளங்கும். இது எம்மில் பல பேருக்குத் தெரிவதில்லை. வெறும் நெற்றியுடன் உலவித் திரிகின்றார்கள். அவர்களது அறியாமையே இதற்குக் காரணம்.

சைவ சமயிகள் ஒவ்வொருவரும் விபூதி அணியத் தயங்கக் கூடாது. நன்றாக அள்ளிப் பூசவேண்டும். திருநீற்றைப் பூசம் போது கிழக்கு முகமாகவேனும் வடக்கு முகமாகவேனும் பார்த்தே பூசுதல் வேண்டும். இதனை உத்தூளனமாகவும் திரிபுண்டரமாகவும் தரிக்கலாம். உத்தூளனம் என்றால் விபூதியைக் கையில் எடுத்து பரவலாகப் பூசுதல். திரிபுண்டரம் என்றால் விபூதியைக் கையில் எடுத்து நீரில் குழைத்து மூன்று குறிகளாகத் தரித்தல்.

பசுவின் சாணத்தால் செய்யப்பட்ட வெள்ளை நிற விபூதியே தரிக்கத் தக்கது. இதனை அணியும்போது நிலத்திலே சிந்தாவண்ணம் அண்ணாந்து "சிவ சிவ" என்று உச்சாடனம் செய்து எமது இன்னல்களும் இடுக்கண்களும் அழிந்தொழிய வேண்டும் என்று சிந்திக்க வேண்டும்.

திருநாவுக்கரச நாயனாரின் சூலை நோயை நீக்கியதும் இந்தத் திருநீறே. அப்பூதியடிகளின் மகனை உயிர் பெற்றெழச் செய்ததும் இந்தத் திருநீறே. பாண்டிய மன்னனின் வெப்புநோய் நீக்கியதும் இந்தத் திருநீறே. மெய்ப்பொருள் நாயனாரின் உயிர் கவர வந்த முத்திநாதனைக் காப்பாற்றியதும் இந்தத் திருநீறே இப்படி எத்தனையோ இடங்களில் இந்த விபூதிகள் பெருமை அருமையாகக் கூறப்பட்டுள்ளது. ஆகவே, சைவ சமயிகளான நாங்கள் இதன் அருமை பெருமையை மனதிற் கொண்டு தினசரி விபூதி அணிந்து கொள்ள வேண்டும்.

நெற்றி நிறைய நீறணிந்தால் ஒரு தனி அழகு வந்து விடும். முகத்திலே ஒரு தேஜஸ் காணப்படும். வாழ்க்கையில் எல்லாக் காரியங்களுமே வெற்றியாக நிறைவைத் தரும். எங்கு சென்றாலும் எப்படிச் சென்றாலும் நல்ல வரவேற்பு இருக்கும் எனவே, மேலான செல்வமாக விளங்குகின்றதும் செல்வத்தை அள்ளித் தருவதும் நோய்களை நீக்குகின்ற தன்மை வாய்ந்ததுமான விபூதி சைவ சமய மக்களின் ஒரு வரப்பிரசாதமாகும்.

இன்றைய இளஞ்சந்ததியினர் நெற்றியில் விபூதி அணியத் தயக்கங் காட்டுகின்றனர். ஒரு சில மாணவர்களைத் தவிர மற்ற எல்லா மாணவர்களும் விபூதி அணிவதை விட்டுவிட்டார்கள். இந்த நிலை மாறவேண்டும். இதற்கு யார் காரணகர்த்தாக்கள்? பெற்றோரும் ஆசிரியர்களுமே சைவ சமயங் கற்பிக்கும் பாடசாலையிலுள்ள ஆசிரியர்கள் தாங்களும் விபூதியைத் தரித்து மாணவர்களையும் அணியச் செய்யவேண்டும். அத்துடன் வீட்டில் இருக்கும் பெற்றோர்களும் இதனைக் கவனத்தில் எடுக்கவேண்டும். அப்போதுதான் சைவம் வளரும் விபூதியின் மேன்மை தெரியவரும்.

தொன்று தொட்டு நிலவி வருகின்ற, ஆதியும் அந்தமும் இல்லாத அருட்பெருஞ் சோதியாக விளங்குகின்ற சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சைவசமயத்தின் சின்னமான விபூதி எமக்குக் கிடைத்துள்ள அரிய பொக்கிஷமாகும்.

இதனை அணிந்து இவ்வுலகில் பாவங்கள் நீங்கப்பெற்று சகல சௌபாக்கியங்களுடன் வாழ நம்மை நாமே தயார்ப்படுத்திக்கொள்ள எல்லாம் வல்ல அந்த இறைவனையே வேண்டித் துதிப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரத்தேரில் பவனி வந்த ஈழத்துச் சிதம்பரப் பெருமானைப் போற்றுவோம்.

**இலண்டன் திரு. வ. செல்லத்துரை அவர்கள்**

"ஈழத்துச் சிதம்பரம்" எனப் போற்றப்படும் காரைநகரில் கோயில் கொண்டு அருள் புரியும் சிவபெருமானுக்கு 39 அடி உயர சித்திரத்தேர் சிற்பக்கலைஞர் ஸ்ரீ ஜெயகாந்தன் அவர்களால் உருவாக்கப்படுவதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி. ஊருக்கு ஈசான மூலையில் சிவன்கோயில் அமைந்தமையும் மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாக இறைவன் அருளால் சிவன் கோயிலுக்கு உள்ள சூழ்நிலையுடன் அமைக்கப்பட்ட தன்நிகரில்லாத் தனிப் பெருங்கோயிலும் மக்களும் எப்படி இருக்கவேண்டுமோ அப்படி இருந்து ஆன்மீக சாதனை புரிந்த தலம்-ஈழத்துச் சிவன் கோயிலும் காரைநகர் மக்களும்.

1935ஆம் ஆண்டில் வேதாரணியத்தில் இருந்து வந்த இசை வல்லுனர்கள் பண்இசை நடாத்தியமை, அதனால் ஏற்பட்ட பண்இசை நாட்டம், அதே ஆண்டில் சைவப் பிரசங்கம் செய்ய வந்த பிரமுகர்கள் சிலர் பஞ்வஸ்திரமும், மேலங்கியுடனும் கோயிலுக்குள் நுழைய ஆசாரம், ஒழுக்கம் கூறி நிர்வாகம் அவர்களைத் தடுத்தமையும், சைவ பெரியார் சு.சிவபாதசுந்தரனார் கோயில்களில் செய்யத்தகாதனவற்றை முறை, முறையாக பல நெறிகளிலும் சொல்லிச் சைவ மக்களின் கோயில் ஆசாரங்களை விளக்கி மேன்மைப்படுத்தியமை என்பன எல்லாம் கோயில் நிர்வாக ஸ்திரத்தின் பசுமையான நினைவுகள்.

இந்தக் கோயிலை நடாத்தி வந்த ஆண்டி ஐயா முருகேசு அவர்களையும் அவர்கள் முன்னோர்களையும் எந்தவிதமான நாகரிகமும் அவர்கள் ஒழுக்கங்களையும் நேர்மைத்திறனையும், சைவ வாழ்க்கையையும் பாதிக்கமுடியவில்லை. இவ்வகையான சீர்பூத்த புண்ணியர்கள் வழிநடாத்தி வந்த கோயிலில் பண்ணும் பூசையினால் பலன் உண்டாகும் என்ற உண்மை சிவாசாரியர் என்ற சொல்லுக்கு இலக்கணம் கூறி வாழ்ந்து செயலாற்றிய ஸ்ரீ கணபதீஸ்வரக்குருக்கள், மகன் ஸ்ரீ தியாகராசாக்குருக்கள் அவர்களுடைய கல்வி, திறன், ஒழுக்க மேம்பாடு, ஆசாரம், வேதாகமவித்துவம் எல்லாம் சைவத்துக்கும் சமயத்திற்கும் மிகவும் ஒளிமயமானவை. இந்த ஆசாரம் ஒழுக்கம் என்பனவற்றால் ஈர்க்கப்பட்டு கோயிலுடன் ஒட்டி இருந்து வாழ்க்கையில் நல்லவர்களாக வந்த ர. கனகசுந்தரம், ப. சிவசோதி, Dr. ப. தெண்டாயுதபாணி, விதானையார் பொன்னம்பலம் என்பவர்களுடன் கோயிலை நினைக்கும் போது என் எண்ண அலையில் வரும் பழைய தெவிட்டாத சிந்தனைகள் இறைவனே நீ என உடல் இடங்கொண்டாய் என்ற பண்பட்ட வாழ்க்கை கண்ட பல சகோதரர்களை ஆக்கிய பெருமையும் இந்தக் கோயிலின் சாந்நித்திய பலனே. அவர்கள் பெற்ற இறை இன்பம் மேலும் பல சகோதரர்களை ஈர்த்து நல்லவர்களாக வாழ்ந்தமையும் கண்டோம். ஈற்றில் கல்வியும், செல்வமும் ஒழுக்கமும் மிக்க நல்லவர்களாய் வாழ வழிகாட்டிய அரும்பெரும் கோயில் சிந்தை மகிழ்ந்து சிவபுராணம் ஓதி முந்தை வினை முழுவதும் ஓயப்பண்ணிய வாழ்க்கைக்கு இந்தப் புண்ணிய ஸ்தலம் சாதனமாய் அமைந்தமை நினைக்க தெவிட்டும்.

1971ஆம் ஆண்டு திருவாதிரை நாளில் நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன் அவர்களின் நாதஸ்வர இசையும் கேட்டு நாள் முழுவதும் கோயிலிலிருந்து வணங்கி இலண்டன் செல்ல அனுமதி தந்த பெருமானே நன்றி நன்றி. 1975ஆம் ஆண்டில் லண்டனில் சைவக் கோயில் ஆக்கும் பணியில் என்னையும் இணைதது உருவான உயர்வாசல் குன்று முருகன் கோயில் நிர்வாகத் தலைவனாகச் சென்ற ஏழு ஆண்டுகள் இருந்து ஸ்ரீ ஜெயகாந்தன் அவர்களால் உருவாக்கப்பட்ட 21 அடி உயரமான சித்திரத்தேரை ஆர்ச்வே ரஸ்தாவில் ஓடவைத்தமையும், 2002ஆம் ஆண்டு மேன்மை தங்கிய இரண்டாம் எலிசபெத் மகாராணியை கோயிலுக்கு வரவழைத்து வரவேற்றமையும் இறைவா உன் நினைவொடு வாழ்ந்த வாழ்க்கையின் பலனே.

காலத்தால் எண்ணங்கள் மாறினாலும் "கோயில் வழிபாட்டுக்கே" என்ற ஸ்திரமான நிலை மாறாமல் கோயில் நடைபெறத் திருவருளை வேண்டிக் கொண்டு ஆன்மீக சேவை தடையில்லாமல் இருக்கவும் சித்திரத்தேரில் தாண்டவம் ஆடும் திருவருளைக் கண்டு சித்தம் மகிழ்ந்து நாட்டில் தமிழ் இனம் சிந்தை கலங்காது வாழும் நாளை எதிர்பார்த்துக்கொண்டு சேவைக்கு மகிழ்ச்சியுடன் திருப்பணிச் சபைக்கு நன்றி கூறி மகிழ்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

புலவர் ச. சுந்தரேசம்பிள்ளை அவர்கள்
சிதம்பரம்

நன்றி என்ற சொல் தனக்குச் செய்த நன்மையை மறவாமை எனப்பொருள்படும். கடவுள் உயிர்கள் மேல் உள்ள கருணையால் தான் நமக்கு இந்த அழகான உடலைத் தந்தார். முன்பு செய்த நல்வினையால்தான் புனிதமான மனிதப் பிறப்பைத் தந்தார். அந்த நல்வினை, தீவினையாக மாறியிருந்தால் நாயாய், நரியாய், பன்றியாய், பறவையாய் உடலெடுக்க வைத்திருப்பார். மனித உடலை மட்டுமா தந்தார்? அதில் கண், காது, மூக்கு, வாய் முதலியன வைத்து மால் என்ற மயக்கத்தையும் வைத்தார். உலக சுகத்தை அனுபவிக்க சூரியன், சந்திரன், காற்று, நீர், நெருப்பு முதலியன அமைத்தார். உயிரையும் உடலுக்குள் வைத்தார். காற்றாக இருக்கும் உயிர் எளிதில் ஓட, ஒன்பது ஓட்டைகள் வைத்துள்ளார். அத்தனை ஓட்டைகள் இருந்தும் இத்தனை ஆண்டுகள் ஓடாமல் காத்து வருகிறார். எப்போது, எந்த இடம், எந்த நேரம் ஆவியைப் போக்குவார்? என்பது அவருக்குத்தான் தெரியும். இத்தனை அற்புத உடலையும் உலகையும் தந்திருக்கும் அந்தக் கடவுளை நினைத்து ஒவ்வொரு கணமும் நன்றி செலுத்த வேண்டாமா? கடவுள் கடன் நம்மைக் காப்பது. நம் கடன் அவருக்குப் பணி செய்வது நன்றி செலுத்துவது வழிபடுவது உயிர்களிடம் கடவுளைக் காண்பது இது நன்றி செலுத்துவதற்குச் சமமாகும். அவன் அளித்ததை அப்பர் அழகாகச் சொல்கிறார்.

**"கால்கொடுத்து இருகை ஏற்றிக் கழிநிறைத்தி இறைச்சி மேய்ந்து**
**தோல்படுத்து உதிரநீரால் சுவரெடுத்து இரண்டு வாசல்**
**ஏலுடைத் தாவ மைத்து அங்கு ஏழுசா லேகம் பண்ணி**
**மால்கொடுத்து ஆவி வைத்தார் மாமறைக் காடனாரே"** – 4ம் திருமுறை

ஏதும் ஆதரவில்லா ஒரு யாசகனுக்கு ஓராடை; ஒரு வேளைச் சோறு; கைச் செலவுக்கு ஐந்து ரூபாய் கொடுத்தவுடன், கொடுத்தவன் மகிழ்ச்சி கொள்வதற்குமுன் பெற்றவன் மிகப் பெருமை கொள்ள வேண்டும். இதை விடுத்து ஐந்து ரூபாய் தந்தவன், நூறு ரூபாய் தந்தாலென்ன? குறைந்தா போய்விடும்? என்று மனம் சுளித்துக் கொண்டால் அவனைப் படைத்த கடவுள் தான் மனம் சுளிப்பார்; சிரிப்பார்; இவன் இட்டவனை மெச்சாமல் ஏசுகிறான். இவனுக்கு நாளை இதுவும் கிடைக்காமல் துன்புறுவான் என்று தண்டனை தருவார். கடவுள் தந்த நன்மைகளுக்கு நன்றி காட்டாதவன் துன்புறுவான். மக்களைக் கொடுமைப்படுத்தி வரி முதலியன வாங்கிப் பொருள் சேர்க்கும் மன்னன் துன்பப்படுவான். தீமைக்கு வெட்கப்படாத குலமகள் விரைந்து கெடுவாள். வெட்கப்படும் விலைமகள் விரைவில் அழிவாள் என்று அன்றே ஔவையார் எச்சரித்திருக்கிறார்.

**"நிட்டூர மாக நிதிதேடும் மன்னவனும்**
**இட்டதனை மெச்சாத இரவலனும் – முட்டவே**
**கூசிநிலை நில்லாக் குலக்கொடியும் கூசிய**
**வேசியும் கெட்டு விடும்."**

(நிட்டூரம்–கொடுமை, இரவலன்–யாசகன், குலக்கொடி–குடும்பப் பெண், வேசி–விலைமகள்.)

நீ நல்வாழ்வு வாழ வேண்டும் என்று விதியிருந்தால் அதை உலகம் முழுதும் ஒன்று திரண்டு தடை செய்தாலும், தடை செய்ய முடியாது. கடவுள் நம்மிடம் எதுவும் கைம்மாறு கருதாமல், நம்மையும் உலகையும் படைத்துள்ளார். நன்றி காட்டி வாழ்பவன் நாட்டில் எந்த நிலையில் இருந்தாலும் மகிழ்ந்து வாழ்வான். நன்றி காட்டாதவன் பெருக வாழ்ந்தாலும் சிறுமை அனுபவித்துப் பிறரால் இகழப்பெற்று மனம் நொந்து வாழ்வான். நமது உடலின் நிழல் நம்மிடமே இருக்கும். நமது விதி நம்மையே சேரும். 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' நன்றியே நல்வாழ்வுக்கு வித்து. நன்றி உணர்வுடன் நல்வாழ்வு வாழ்வோமாக! **நன்றி: ஸ்ரீகுமரகுருபரர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவசின்னங்கள்

மட்டுவில் ஆ. நடராசா அவர்கள்

சமயங்கள்பல. ஆனாலுஞ் சில சமயத்தவர் மாத்திரமே தத்தம் சமய சின்னங்களை அணிகின்றார்கள். கிறிஸ்தவர்களின் சின்னம் சிலுவை. இஸ்லாமியரின் உடை அவர்களை அடையாளங் காட்டுகின்றது. புத்த சமயத்தவர் எந்தச் சின்னத்தையும் அணிவதாகத் தெரியவில்லை. சைவ சமயிகள் விபூதி உருத்திராக்கங்களைத் தமது சமய சின்னங்கள் என்கின்றனர்.

திருவதிகைப் பதிக்குத் திருநாவுக்கரசு சுவாமிகள் சென்ற காட்சியை,

"தூயவெண் ணீறு துதைந்தபொன் மேனியுந் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவருஞ் சிந்தையு நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும் பதிகச்செஞ்சொல்
மேயசெவ் வாயு முடையார் புகுந்தனர் வீதியுள்ளே"

எனப் பெரிய புராணங் கூறுகின்றது.

தைவரும் சிந்தை – அன்போடு சிந்திக்கும் உள்ளம்.

இதில் தாழ்வடமென்றது உருத்திராக்க மாலையை இக்கூற்று, விபூதியும் உருத்திராக்கமுஞ் சிவசின்னங்கள் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. இதனாலன்றோ நல்லை நகர் ஆறுமுக நாவலரும் தாமெழுதிய சைவ வினா விடையில், "சைவர்களால் அவசியமாகச் சரீரத்திலே தரிக்கற்பாலனவாகிய சிவசின்னங்கள் யாவை?" என்னும் வினாவுக்கு, "விபூதி உருத்திராக்கம் என்னும் இரண்டுமாம்" என விடை கூறியிருக்கிறார்.

திருநீறு சைவர்கள் தம்மை அடையாளங் காட்டுவதற்காக மாத்திரம் அணியும் பொருளல்ல. அது சிவபெருமானது அருளொளி விளக்கத்தைக் குறிக்குஞ் சின்னம். பாண்டியனுடைய வெப்பு நோயைச் சமணரும் திருஞான சம்பந்தப் பிள்ளையாரும் தீர்க்கத் தொடங்கிய போது, சமணர் பாண்டியனது இடப்பாகத்திற் பொருந்திய நோயைத் தீர்க்கக் கருதி மயிற்பீலி கொண்டு தடவ அந்நோய் மேலும் மேலும் வளர்ந்தது. நோயின் வெம்மையைப் பொறுக்கலாற்றாத பாண்டிய மன்னன் சம்பந்தப் பிள்ளையாரை மனவருத்தத்துடன் நோக்கினான். சம்பந்தர்,

"தென்னவ னோக்கங் கண்டு திருக்கழு மலத்தார் செல்வர்
அன்னவன் வலப்பால் வெப்பை யாலவா யண்ணல் நீறே
மன்னுமந் திரமு மாகி மருந்துமாய்த் தீர்ப்ப தென்று
பன்னிய மறைக ளேத்திப் பகர்திருப் பதிகம் பாடி"

திருவளர் நீறு கொண்டு திருக்கையாற் றடவத் தென்னவனது வெப்பு நோய் தீர்ந்தது.
கழுமலம் – சீகாழி

சம்பந்தர் வெப்புநோய் தீர்க்கப் பாடிய பதிகத்தினால், விபூதி மந்திரமாகவும் தந்திரமாகவும் மருந்தாகவும் பயன்படுவதோடன்றி, போற்றி அணிபவர்க்கெல்லாம் பெருமை கொடுப்பதென்பதையும் துதிக்கப்படுவதென்பதையும் அறியலாம். துதிக்கப்படுவது நீறென்பது,

"மாலற நேய மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரனெனத் தொழுமே"

என்னும் மெய்கண்டதேவ நாயனார் வாக்காலும் வலியுறுத்தப்படுகின்றது.

விபூதி சைவ சமயிகளுக்கோர் உண்மையை உணர்த்துகின்றது. விபூதியாவது பசுவின் சாணத்தை அக்கினியினாலே சுடுதலால் உண்டாகிய திருநீறு. பசு என்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மாவையும் சாணம் என்பது பசுவெனப்படும் ஆன்மாவைப் பற்றியிருக்கும் மலத்தையுங் குறிக்கும். எனவே விபூதி பசுவின் சாணத்தை அக்கினியாற் சுட்டெரிக்க வெண்ணிறம் விளங்குவது போல ஆன்மாவைப் பற்றியிருக்கும் மலத்தை ஞானாக்கினியாற் சுட்டெரிக்கச் சிவ விளக்கம் உண்டாகும் என்பதைக் குறிக்கிறது.

ஞானம் சைவ நாற்பாதத்தின் நாலாவது படி. எனவே ஞானத்தைப் பெறும் பொருட்டு நாம் சரியையாதியான நாற்பாத நெறியில் நிற்க வேண்டுமென்பதையும் விபூதி உணர்த்துகின்றதெனலாம்.

விபூதியின் சிறப்பைக் குறிப்பிடக் கருதியதனாற் போலும், சேக்கிழார் பெருமான் தாம் பாடிய திருத்தொண்டர் புராணத்தின் முதற்காண்டத்து முதற் பாடலின் முதல் வரியில் "திருநீறு" என்னுஞ் சொல்லை உபயோகித்திருக்கிறார்.

**"பொன்னின் வெண்திரு நீறு புனைந்தெனப்**
**பன்னு நீள்பனி மால்வரைப் பாலது**
**தன்னை யார்க்கு மறிவரி யானென்றும்**
**மன்னி வாழ்கயி லைத்திரு மாமலை"** என்பது அப்பாடல் .

பன்னும் – பாராட்டிச் சொல்லப்படும். மன்னும் – நீங்காமற் பொருந்தியிருக்கும்
மால்வரை – பெரியமலை

விபூதியை வடக்கு முகமாகவேனும் கிழக்கு முகமாகவேனும் இருந்து கொண்டு நிலத்திற் சிந்தாவண்ணம் அண்ணாந்து 'சிவ சிவ' என்று சொல்லி வலக்கையின் நடுவிரல் மூன்றினாலும் உத்தூளனமாக அல்லது திரிபுண்டரமாக நெற்றியிலே தரித்தல் வேண்டும். திரிபுண்டரம் மூன்று குறி. உத்தூளனம் பரவிப் பூசுதல். இவ்விதிக்கு மாறாக ஒரு விரலால் விபூதி தரித்தல் குற்றமாகும். விபூதி, விபூதி தரித்தல் பற்றிய விபரங்களை ஆறுமுகநாவலர் அவர்கள் எழுதிய முதலாம் இரண்டாம் சைவ வினாவிடைகளிற் காண்க.

உருத்திராக்கம் என்பது தேவர்கள் முப்புரத்து அசுரர்களால் தமக்கு நேர்ந்த துன்பத்தைச் சிவபெருமானுக்குக் கூறியபோது அவருடைய மூன்று திருக்கண்களுஞ் சொரிந்த நீரிற்றோன்றிய மணிகளாகும். மதுபானமும் மாமிச போசனமும் இல்லாதவர்களாய் ஆசார முடையவராயுள்ளவர்கள் உருத்திராக்கந் தரிக்கலாம்.

உருத்திராக்கந் தரிப்போர் குடுமியிலும் பூணூலிலும் ஒவ்வொரு மணியும் தலையிலே இருபத்திரண்டு மணியும் காதில் ஒருமணி அல்லது ஆறுமணியும் கழுத்தில் முப்பத்திரண்டு மணியும் புயத்திற் பதினாறு மணியும் கையிற் பன்னிரண்டு மணியும் மார்பில் நூற்றெட்டு மணியுந் தரிக்கவேண்டுமெனவும், நித்திரை செய்யும் போதும் மலசலங் கழிக்கும் போதும் நோயுற்றிருக்கும் போதும் பிறப்புக்களால் வரும் ஆசௌக காலங்களிலும் குடுமி காது, பூணூல் தவிர்ந்த மற்றைய தானங்களில் உருத்திராக்கந் தரிக்கக் கூடாதெனவுங் கூறப்படுகின்றது.

சிவபெருமானுடைய கண்ணீரிற் தோன்றிய உருத்திராக்கமணி அவருடைய கண்களிலிருந்து தோன்றுந் திருவருளைக் குறிக்கின்றது. எனவே திருநீறும் உருத்திராக்கமும் சிவபெருமானுடைய அருளொளி விளக்கத்தைக் குறிக்குஞ் சின்னங்களாகக் கருதப்படுகின்றன.

இக்காலத்தில் உருத்திராக்கந் தரிப்போரைக் காணுதல் அரிதினும் அரிதாகிவிட்டது. விபூதி தரிப்போரிற் பலர் ஒரு விரலால் விபூதி தரித்தலாகாது என்ற நாவலரின் அறிவுரையைப் புறக்கணிப்பவர்களாகவே காணப்படுகிறார்கள். அதனால், பாடசாலைகளில் சைவ சமயத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்கள், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், சைவ சமய விழாக்களை எடுப்போர், ஆலய பரிபாலனஞ் செய்வோர் சைவ சமயிகளை அவர்களது சமய சின்னங்களை விதிப்படி அணியச் செய்வதற்காவது நடவடிக்கையெடுக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிசேர் அருட்கவி ஆறாய்ப் பொழிந்தவர்

**- சிற்பி -**

**கல்விநிலை காரியங்கள் கல்யாணம் வாழ்வுமுறை**
**எல்லவர்க்கும் நன்கமைய எண்ணியவர் - பல்கலையில்**
**வித்தகரா மெங்கள் விநாசித்தம் பிப்புலவர்**
**இத்தரையை விட்டகன்றா ரேன்?**

பற்றை மறைவில் படர்ந்திடும் புற்றிலே
அற்புதம் புரிந்தநல் அரவுகள் இரண்டினை
நாரா யணனென நன்றா யுணர்ந்தே
ஆரா அன்புடன் அந்நா ரணர்க்கு
அற்புதங் கொழிக்குமோர் ஆலயங் கட்டியே
பொற்புறப் பூசனை புரிந்தநற் பெரியார்
கல்வியிற் றோல்வியாற் கவலைகள் கொண்டோர்
இல்லறம் என்னும் நல்லறம் இயற்றும்
வாய்ப்பில் லாமையால் வாட்டம் அடைந்தோர்
நோயின் கடுப்பால் நொந்து மெலிந்தோர்
துன்பச் சுமையால் துவண்டு கிடந்தோர்
இன்பத் திற்காய் ஏங்கித் தவித்தோர்
ஓய்வே யில்லா துழைத்த போதிலும்
வாழ்வில் வறுமை வரட்சியால் வாடியோர்
தம்குறை தீர்ந்திடத் தருவார் வாக்கெனும்
நம்பிக் கையுடன் நாடினர் அவரை.
ஆசீர் வாதமோ டாலோ சனைகள்
நேசமே பொங்கிடும் நெஞ்சுடன் ஈந்தார்
இறைவனை நம்பு; இயன்றநல் லறஞ்செய்;
மறந்தும் வாழ்க்கையில் வஞ்சகம் வேண்டாம்
உண்மையே பேசி ஓம்புவாய் ஒழுக்கம்
எண்ணம் உயர்வாய் என்றுமே திகழ்க
செய்திடும் தொழில்கள் சிறப்புடன் செய்க
உய்யும் வழியிவை உவப்புடன் சொன்னார்.
கோள்கள் புரிந்திடும் குறும்புகள் நீங்கி
வாழ்க்கை மேம்படும் வழிமுறை சொன்னார்.
அன்னை அவர்நா ஆசனங் கொண்டதால்
சொன்னவை யெல்லாம் சுகமே செய்தன.
மணியாய் முத்தாய் மலர்ந்தசிந் தனைகள்
**அணிசேர் அருட்கவி ஆறாய்ப்** பெருகின.
கணனியோ டச்சகம் கைக்கு எட்டியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணவும் பிறவும் பற்றா திருப்பதால்
எழுத்தை அச்சிலே ஏற்றுவ தென்பது
எழுத்தாளர் பலர்க் கியல்வதே யில்லை.
விநாசித் தம்பியர் வேறோர் வகையினர்
அநாய சமாயவர் ஆக்குவ தனைத்தும்
அந்தக் கணமே அச்சிலும் ஏறிடும்.
சந்தத் தமிழிற் சந்தனங் கமழும்
தத்துவப் பாடல் தலபுரா ணங்கள்.
பக்திப் பனுவல் பஜனை பாசுரம்
பெருமை சேர்க்கும் பிள்ளைத் தமிழ்நூல்
திருப்புகழ் ஊஞ்சல் தீந்தமிழ்க் கீர்த்தனை
அனைத்தடி யார்களும் அன்புடன் படித்திடும்
விநாயக புராண விளக்கக் காவியம்
கந்தபு ராணக் காவிய வசனம்
செந்தமிழ் மொழியின் சீரிய சொத்துக்கள்.
உச்சப் பயனை உலகினுக் களிக்கும்
அச்சிலே திகழும் ஆன்மிக விருந்து.
இப்படி எத்தனை எத்தனை நூல்கள்
அப்பனின் வழிக்கெமை ஆற்றுப் படுத்தின!
எடுத்தநற் பணிகளை ஏற்றமாய்ச் செய்தவர்
அடுத்தவர் மகிழ்ச்சியில் அடைந்தவர் மகிழ்ச்சி
கற்றதன் பயனாய்க் கடவுளைத் தெளிந்தவர்
இப்படி வாழ்ந்தவர் ஏனெமைப் பிரிந்தார்?
அப்பனின் அடிகளின் ஆசை அழைத்ததோ?
மரணம் என்பது மனிதர்க் குறுதியே
இரவல் உலகம் இதுவெனும் நினைப்போ?
என்னதான் காரணம்? எவர்தான் அறிவார்?
அன்னவர் செயல்கள் அமிர்தவா சகங்களை
அன்புடன் நினைப்போம் அவர்பணி தொடர்வோம்
துன்பமே இயல்பெனும் தொடரினைத் துறப்போம்
என்றுமே எங்கணும் இன்பமே நிறைப்போம்
நன்றியை நெஞ்சிலே நாட்டுவோம் நாமே.

✤✤✤

தெய்வ அருட்கொடையாற் சீரான சிந்தனையால்
உய்யும் வழிபலர்க்கு ஓதியவர் - மெய்யுணர்வைக்
கொண்ட விநாசித்தம் பிக்கவிஞர் கோமானாம்
அண்டர் உலகின் அணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக் கோயில்கள் நிறைந்த மாத்தளையின் வரலாறு

**மாத்தளை அருணேசர்**

ஈழவள நாடாகிய இலங்கைத் தீவின் மத்திய பகுதியில் உள்ள வரலாற்றுப் புகழ் கொண்ட கண்டி மாநகரிலிருந்து 16 மைல் தொலைவில் மாத்தளை மாவட்டம் அமைந்துள்ளது. இம் மாவட்டத்துத் தலைநகரம் மாத்தளை நகரமாகும். இது சுமார் 6 மைலுக்கு மேற்பட்ட நீட்டுப் போக் குடையது.

இதன் கிழக்குப் பகுதியில் இறத்தோட்டையும், லக்கலை மலைத் தொடரும்; மேற்கில் அழகுமலை, அஸ்கிரி என்ற மலைத் தொடரும்; தெற்கில் பலக்கடுவை மலைக் கணவாயும்; வடக்கில் அலுவிகாரை என்ற பௌத்த தலமும் இதங்கு எல்லைகளாய் அமைந்துள்ளன.

பண்டைக்காலத்தில் மாத்தளை ஒரு சிற்றூராகவிருந்து பிற்காலத்தில் தான் பெரும் நகரமாக வளர்ச்சி யடைந்தது. போக்குரத்துச் சாலை களோ, வண்டிப் பாதைகளோ இல்லா திருந்த அக்காலத்தில் இலங்கையின் மலைநாட்டுக் கோப்பித் தோட்டப் பயிர்ச் செய்கைக்கு வேலையாட்களாக தென்னிந்தியாவிலிருந்து ஆங்கிலேயர் களால் முதல் முதல் கொண்டுவரப்பட்ட தமிழ்த் தொழிலாளர்கள் மாத்தளை யினூடாகத்தான் அழைத்துச் செல்லப் பட்டனர்.

அவர்கள் இந்தியாவிலிருந்து படகின் மூலமாக இக்கரைக்குக்கு கொண்டுவரப்பட்டு, அனுராதபுரத்து பெருங் காடுகளினூடாய் மாத்தளைக்கு அழைத்துவரப்பட்டனர். வரும் வழியில் ஆங்காங்கு காட்டு யானைக் கூட்டங்கள் இருந்தனவாதலால் அவற்றை நெருங்க விடாமல் இரவு நேரங்களில் தீப்பந்தங் களைப் பிடித்துக்கொண்டு வருவது வழக்கம். இப்படியாக இவர்கள் பயங்கர யானைக் காட்டினூடாக பல நாட்கள் நடந்துவர வேண்டியதா யிருந்தது.

இவர்கள் காடுகளில் சிற்சில இடங்களில் தங்கிச் சமைத்துச் சாப்பிடு வதற்கென இளைப்பாற்று மண்டபங்கள் வழிநெடுகிலும் நிர்மாணிக்கப்பட் டிருந்தன. அவ்வித மண்டபத்தின் சிதைந்த சிமிந்தி அடித்தளப்பகுதி அலுவிகாரை அரசாங்க வைத்திய சாலையின் பின் புறத்தில் இன்றும் இருந்து வருவதைக் காணலாம்.

இந்தத் தொழிலாளர்களின் கூட்டம் காடுகளைக் கடந்து வந்தபின் முதல் முதல் நுழைவாயிலாக அவர்களுக்கு முன்னுக்கு எதிர்ப்பட்ட செழிப்பான ஊர் மாத்தளையே. இங்கு வந்தவர்களை கண்டிக்கு அழைத்துச் சென்று மலைநாடுகளுக்கு அனுப்புவது வழக்கம். மலைநாட்டுக்குப் போக விரும்பாத சிலர் மாத்தளையிலேயே தங்கிவிட்டனர். இங்கு அவர்கள் தோட்டப் பகுதிகளிலும் நாட்டுப் பகுதி களிலும் தங்கினார்கள். இவர்களில் பலர் பிற்காலத்தில் ஆங்காங்கு சொந்த நிலம் வாங்கி வீடுகட்டிக் குடியமர்ந் தார்கள்.

பிற்காலத்தில் முஸ்லிம்களும் செட்டியார்களும் வந்து வர்த்தகம் செய்யலாயினர். இவ்விதம் இந்தியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந்தொகையாகக் குடியேறியிருந்ததால் மாத்தளை ஒரு குட்டி இந்தியாவாகத் திகழ்ந்தது.

மாத்தளை நகரின் ஊடாகத்தான் திருகோணமலை, அனுராதபுரம். பொலன்னறுவை, சீகிரி. குருணாக்கல் முதலிய இடங்களுக்குப் போவார்கள்.

மாத்தளை வட்டாரச் சுற்றுப் புறங்கள் மிகச் செழிப்பு பொருந்தியவை. இங்கு தேயிலை. இறப்பர். தென்னை, கொக்கோ. கோப்பி, கிராம்பு, ஏலம், மிளகு, இலவம் பஞ்சு, பாக்கு, சாதிக்காய் ஆகிய பல விளை பொருட்கள் பயிராகின்றன. நெல், மற்றும் மரக்கறி வகைகளும் பயிராகின்றன.

**இராவணன் சம்பந்தப்பட்ட லக்கலை**

மாத்தளை ஒரு வரலாற்றுப் புகழ் பெற்ற பிரதேசமாகும். இங்கு இறத்தோட்டையை ஒட்டி லக்கலை என்ற மிக உயரமான மலை இருக்கிறது. இது 6248 அடி உயரமுடையது. இம்மலை உச்சியின் மீது தட்டையான பாறை உள்ளது. இதில் இராவணன் தனது புட்பக விமானத்தில் வந்திறங்கி அங்கிருந்து திருக்கோணமலைக்கு நாள்தோறும் சென்று சிவ பூசை செய்துவிட்டுத் திரும்பியதாகக் கூறப்படுகிறது. இதற்கேற்றபடி இராவணனைக் குறிக்கும் சின்னங்களும் பெயர்களும் இங்கு இருப்பதைக் குறிப்பிடுகிறார்கள்.

இம்மலையடிவாரத்திலுள்ள பள்ளத்தாக்கு வழியாகத்தான் முதல் முதல் அநுராதபுரத்துக்கு காட்டுப் பாதையில் தமிழ்த் தொழிலாளர்கள் மாத்தளைக்கு வந்தார்கள்.

**இந்துக் கோயில்கள்**

பழங் காலத்திலிருந்தே மாத்தளையில் தமிழ் மக்கள் வசித்து வந்தனராதலால் இங்கு பல கோயில்கள் எழுந்துள்ளன. அவற்றில் முக்கியமானவை - ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம். ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில், ஸ்ரீ முத்து விநாயகர் கோயில், கணங்காமம் ஸ்ரீ விநாயகர் கோயில் ஆகியன.

மற்றும் சுற்றுவட்டாரங்களில் இருப்பவற்றுள் முக்கியமானவை - பீரிதவளை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில், வாரியப்பொலை மாரியம்மன் கோயில். சுதுகங்கை ஏழுமுகக் காளி அம்மன் கோயில் முதலியன குறிப்பிடத் தக்கவை. மற்றும் தோட்டப் பகுதிகளிலும் பல கோயில்கள் இருக்கின்றன.

**ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்**

மாத்தளையில் உள்ள கோயில் எல்லாவற்றிலும் மிக முக்கியமானதும், சிறப்பானதும், பெரியதுமான கோயில் ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம் எனப்படும் திருத்தலமாகும்.

இத்திருக்கோயில் சிங்கள மன்னர்கள் காலத்திலேயே இங்கு தாபிக்கப்பட்டு இந்துக்களால் வழிபாடு செய்யப்பட்டு வருகின்றதெனக் கூறப்படுகிறது. ஆனால் அதற்குரிய சான்றுகள் கிடைப்பனவாயில்லை.

ஆயினும் இக்கோயிலை முதல்முதல் நிறுவியவர் கருப்பண்ணன் என்ற ஒரு பக்திமான் என்பது அறியப்பட்டுள்ளது. அவருக்குப் பின்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்குச் சீடராயிருந்த சுப்பாப் பிள்ளை என்பவர் கோயிலைத் தொடர்ந்து நடத்தி வந்தார். குடிசை நிலையில் இருந்த இக்கோயிலை கட்டிடம் அமைத்துத் திருத்தினார் இவர். அத்துடன் கோயிலை சுற்றியுள்ள நிலத்தையும் வாங்கி 1852ம் ஆண்டில் இதற்கு மானியம் செய்து வைத்தார். இந்த விபரங்கள் அக்காலத்திய பதிவேடுகளிலிருந்து தெரியவருகிறது.

மாரியம்மனுக்கு தலைமையான இடம் தமிழ் நாட்டில் திருச்சிராப்பள்ளிக் கருகிலஎள்ள சமயபுரம் என்னும் ஊராகும்.

அங்கு அம்மனுக்கு ஆண்டு தோறும் பெரும்பூசை போட்டுத் தேரிழுத்துத் திருவிழா நடத்தி வருகிறார்கள். அவ்வம்மனின் மகிமை தமிழ் நாடெங்கும் பிரசித்தமானது.

இந்த சமயபுர மாரியம்மனை மனதில் வைத்தே மாத்தளையில் அக்காலத்தில் தமிழ் நாட்டிலிருந்து வந்து குடியேறிய தமிழர்கள் முத்துமாரியம்மன் என்னும் பெயரால் சிறு கோயில் வைத்து வணங்கி வரலானார்கள்.

இவ்வம்மன் மூர்த்தி சிறிது, கீர்த்திபெரிது என்பதற்கிணங்க மிக மகிமை பொருந்தியதாக விளங்கியது. பக்தர்கள் தங்கள் குறைபாடுகளைத் தீர்த்து வைக்கும்படி இவ்வம்மனை வணங்கி நேர்ந்து கொண்டால் அவர்களுக்குத் தக்க நிவர்த்திகள் கிடைத்தன. நோயினால் வருந்து பவர்கள் அம்மனை பக்தியுடன் தொழுது வேண்டிக் கொண்டால் நோய் தீர்ந்துவிடும்.

ஏதாவது பொருளை திருட்டுக் கொடுத்தவர்கள் அம்மனிடம் போய் முறையிட்டுக் காணிக்கை கட்டி நேர்ந்து கொண்டால் போதும், திருடன் பிடிபடுவான்; அல்லர் அவன் விபத்துக் குள்ளாகித் துன்பப்படுவான்.

இவ்வாறு நன்மைகளை அம்மன் அருளி வந்ததால் அவளின் மகிமை நாடெங்கும் பரவத் தொடங் கியது. அதனால் இலங்கையின் நாலா திசைகளிலிருந்தும் பக்தர்கள் வரத் தொடங்கினார்கள்.

சுப்பாப்பிள்ளையின் காலத் துக்குப்பின் நொத்தாரிஸ் முருகேசு என்ற பக்திமான் இக்கோயிலின் நிர்வாகத்தைக் கையேற்றார். இவர் பல ஆண்டுகள் வரை கோயிலைச் சிறப்புடன் நடத்தி வந்தார. இவருக்கு உதவியாக அப்போதிருந்த தமிழ்ப் பொதுமக்களும் கோயில் நிர்வாகத்தில் ஒத்துழைத்தார்கள்.

அதன் பின் இக்கோயில் பல நிர்வாகங்களின் கீழ் இருந்தது. பிறகு நிர்வாகத்தில் சில சிக்கல்கள் எற்பட்டு ஒரு பொதுச்சபையின் பொறுப்பில் விடப்பட்டது. இச் சபையினர் பொறுப் பேற்றபின்பு கோயிலுக்கு பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. கட்டி டம் புதுப்பிக்கப்பட்டு விசாலிக்கப் பட்டது. மூல கோபுரமும் அமைக் கப்பட்டு 1958இல் கும்பாபிஷேகம் நடத் தப்பட்டது. பின் தொடர்ந்து ஆலயம் பல திருப்பணிகளை நிறைவேற்றிச் சிறப்புற்று விளங்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் ஒளி - தகவல் களஞ்சியம்

✦ துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 24ஆவது ஆண்டு நிறைவு விழா அன்னை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் 25-02-2006 அன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது. தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர் திரு சு. புண்ணியசீலன் தம்பதிகள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மகளிர் இல்ல மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் சிறப்பாக இடம்பெற்றன. 2007ம் ஆண்டு மகளிர் இல்லத்தின் வெள்ளி விழா நடைபெற இருப்பதனை தலைவர் சபைக்கு எடுத்துரைத்தார். தேவஸ்தான பிரதமகுருக்கள் ஆசியுரையினையும், செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் வரவேற்புரையினையும், இணைச் செயலாளர் திரு நா. தவநாதன் நன்றியுரையினையும் ஆற்றினார்.

## ✦ வவுனியா குருமண்காடு ஸ்ரீகாளி அம்மன் திருக்கோவில் கும்பாபிஷேகம்.

வவுனியா நகரில் மிகவும் பிரசித்தமான குருமண்காடு ஸ்ரீ காளி அம்மன் திருக்கோவில் மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் சித்திரை மாதம் நடைபெறவுள்ளது. ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு பஞ்சதள இராஜகோபுரம் அமைக்கப்பட்டு பல்வேறு திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற ஏற்பாடு செய்துள்ளனர்.


## ✦ அகில இலங்கை இந்துமா மன்றம் யாழ் குடாநாட்டு மக்களுக்கு அம்புலன்ஸ் சேவை

இகில இலங்கை இந்துமா மன்றம் மனிதநேய அமைப்பும் இணைந்து முப்பத்துநான்கு லட்சம் ரூபா பெறுமதியான அம்புலன்ஸ் வண்டியை கொள்வனவு செய்து சிவத்தொண்டர் சேவைப்பிரிவில் மக்களுக்கு உதவ முன்வந்துள்ளது. குறிப்பாக யாழ் குடாநாட்டிலிருந்து நோயாளரை குறைந்த செலவில் கொழும்புக்கு வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்வதற்கும் சைவ ஆலய விழாக்களில் பக்தர்களுக்கு உதவவும் இடர்காலத்தில் உதவிப் பணிக்கு பயன்படுத்தவும் இவ் அம்புலன்ஸ் வண்டி பயன்படுத்தப்படவுள்ளது. சிவராத்திரி அன்று திருக்கேதீஸ் வரத்தில் அங்குரார்ப்பண வைபவம் இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொடை வள்ளல் தர்மகுலசிங்கம் தம்பதிகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வல்வெட்டித்துறை சிவன்கோயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org